சம்பூரண முண்டாம்.
சுபாவம் மாறிப்போவதால்,
நற்சீரைப் பெறலாம்.

4 ஆனந்த பரவசமும்
உண்டாகும் இவ்வாறாய்.
பேரின்பத்தின் அச்சாரமும்,
ஈவாரே நிறைவாய்.

5 பிசாசின் பெலனறவும்,
கெம்பீரித் தாறுவோம்,
இயேசு அரசாளவும்,
ஆனந்தம் பெறுவோம்.

---

49 S. A. 83.

"Cleansing for me."

1 என் மீட்பர் சிந்தின ரத்தத்தினால்,
செய்யும் சுத்தம்,
என் பாவம் நீங்க நான் ஜெபிப்பதால்;
செய்யும் சுத்தம்;

முன் பாவச் சேற்றிலே நான் அமிழ்ந்தேன்,
அனேகமாய்த் தப்பிதங்கள் செய்தேன்,
நீர் தந்த வாக்கை நான் நம்பி வாறேன்,
செய்யும் சுத்தம்.

2 நான் வெறுக்கும் உள் வினையினின்றும்,
செய்யும் சுத்தம்;
லோக, மாம்ச, பாசக் கறையினின்றும்,
செய்யும் சுத்தம்;
மீட்பரே! உம் வாக்கை நம்பி வாறேன்;
மாய்மாலனாய் உம்மை நோக மாட்டேன்,
லோகத்தார் செல் பாதை செல்லமாட்டேன்,
செய்யும் சுத்தம்.

3 வாதிக்கும் பாவத் துக்கத்தினின்று,
செய்யும் சுத்தம்;
நாசத்தைக் காட்டும் பயத்தினின்று,
செய்யும் சுத்தம்;
மீட்பரே! உம்மால் நான் கழுவப்பட
பிள்ளைபோல் நம்பி என் கையைநீட்ட
துணிந்து, நீர் என்னைச் சுத்தி செய்ய
கெஞ்சுகிறேன்.

4 லோகத்தார் வீம்புக்கஞ்சாதபடி,
செய்யும் சுத்தம்;
பயமின்றி உம்மைப் போற்றும்படி,
செய்யும் சுத்தம்;
உம்மை நான் சேர்ந்தவன் என்றறிய
என்னைப் பலப்படுத்தி நீர் ஆள
சோதனை நாளில் நான் கீதம் பாட
செய்யும் சுத்தம்.

---

50 S. A. 110.

"Oh! glorious fountain."

1 தீர்த்தப்பாவக் கூரோடித்து
சிறையை மீட்கிறூர்;

ரத்தத்தினால் பாவம் தீர்த்து
யேசு ஜீவன் தாறார்.
மாமகத்துவ ஊற்று
எனக்காய் பாயுது.

2 என்னை யாளும் பாவத்தை நீர்
நிர்மூல மாக்குமேன்;
காயத்தினில் பாயும் செந்நீர்
வல்லமை காட்டுமேன்.

3 ஆத்துமம் தேகம் மற்றுமெல்லாம்
மெய்யாய் படைக்கிறேன்;
இம்மை செல்வம் அற்பப் புல்லாம்
உம்மைப் பெற வந்தேன்.

---

51 S. & S. 621.

"I gave my life for thee."

1 நீ உயிர் பெற,
நான் இரத்தம் சிந்தினேன்;
நீ மீட்கபட,
நான் விலையாகினேன்;
என் ஜீவன் நான் தந்தேன்,
நீ என்னத்தை தந்தாய்?

2 சதாகால இன்பம்,
நீ பெற்று வாழ்ந்திட;
இவ்வுலகின் துன்பம்,
வந்தேன் சகித்திட;
அனேகாண்டாய்ப் பட்டேன் பாடு,
ஓர் நாள் நீ தந்தாயா?

3 மகத்துவ நிலைமை
உனக்காய் நான் விட்டேன்;
உலகில் வாதையை,
உனக்காய்ச் சகித்தேன்;
தந்தேனே நானென்னை,
நீ கொணர்ந்தாய் எதை?

4 உன் ஜீவன் தத்தஞ்செய்,
உன் நேச மீட்பர்க்காய்;
பூலோக வாழ்வு பொய்,
ஜீவி நித்தியத்திற்காய்;
குப்பையாய் உன்னெல்லாம் தந்து,
அவரைப் பின்செல்லு.

---

52 S. & S. 40.

"Seeking for me—for me."

1 யேசு என் மீட்பர் சண்டாளருக்காய்
பூமியில் பிறந்தார் பாலகனாய்,
நீசமா பாவியைக் கருணையாய்
தேடிவந்தார்,—வந்தார்.
தேடிவந்தார்,—வந்தார்.
தேடிவந்தார்,—வந்தார்.
நீசமா பாவியைக் கருணையாய்
தேடிவந்தார்,—வந்தார்.

2 பாவ மா கடனைத் தீர்த்துப்போட்டார்.
தீவினை நீக்கவும் பாடுபட்டார்.
யேசுவைப்போல் வல்ல ரக்ஷகர் யார்?
உயிரைத் தந்தார்,—தந்தார்:
யேசுவைப்போல் வல்ல ரக்ஷகர் யார்?
உயிரைத் தந்தார்,—தந்தார்.

3 சிறியேன் பாவத்தின் மாய்கையினால்.
புத்தி யில்லாமலும் அலையுங்கால்,
நீசனை நினைத்து நேசித்ததால்
ரட்சை செய்தார்,—செய்தார்.
நீசனை நினைத்து நேசித்ததால்
ரட்சை செய்தார்,—செய்தார்.

4 யேசு என் மீட்பர் வந்தருளுவார்.
வானத்தினின்றவர் இறங்குவார்,
மாட்சிமையோடென்னை சேர்த்துக்கொள்வார்!

வாழச்செய்வார்.—செய்வார்.
மாட்சிமையோடென்னைச் சேர்த்துக்கொள்வார்.
வாழச்செய்வார்,—செய்வார்.

---

53 H. M. 35.

'Have you heard about the shepherd."

I மேய்ப்பரைப் பற்றிச் சொல்கிறேன்
எப்போதும் மந்தைத் காப்பார்
பசும் புல் நேர் நடத்துவார்
பகல் நன்னீர் காட்டுவார்
பாழும் வெறும் மலைகள் நேர்
மந்தை கெடும் என்பர் யார்
அந்த அன்புறு நன் மேய்ப்பர்
அவை பிறகே போனார்.
மேய்ச்சலில்லாக்குன்றிலேயும்
நோய்க்கும் ஆடென்றுதேயும்
நேய மேய்ப்பன் உடன்தானே
நோயாட்டைத் தேடுவாரே.

2 அவர் மறப்பார் என்காதே
குளிர் கானகத் தூடே
மந்தை சேர்பவைகளையே
அன்புறுவா ரென்காதே
குன்று தூரப் பள்ள மீதே
நின்று மனவ தமதே
நிலை மாறிக் கான் மேய்ச்சலே
அலைவையுந் தானே

3 கூலி மேய்ப்பனை நம்பாதே
மந்தையை மேய்ப்பார் தாமே
என்றும் காப்பார் அவர் தாமே
சொந்தம் தாம் வாங்கினாரே
பொன்றும் ஆடுகள் என்காதே
அன்பவர் பெலனுமே
நன் சேர்க்க ஆயர்க்குத் தானே
இன்மையா மென்பதிதே

Christ—Sufferings and Death.

கிறிஸ்துவின் பாடும் மரணமும்.

54 S. & S. 115.

"When I survey the wondrous cross."

1 என் அருள் நாதா ! யேசுவே !
சிலுவை காட்சி பார்க்கையில்,
பூலோக மேன்மை நஷ்டமே
என்றறிவேன் உள் மனசில்.

2 ஆ ! அந்த மரத்தில் அல்லால்
வேறொன்றிலும் நான் மகிழேன்.
சிற்றின்பம் யாவும் அதினால்
தகாததென்று தள்ளுவேன்.

3 கை, தலை, காலிலிருந்தும்
பேரன்பும் துன்பும் கலந்தே
பாய்ந்தோடப்பார் ! இக்காட்சியும்
முள்முடியும் ஒப்பற்றதே !

4 சராசரங்கள் அனைத்தும்
அவ்வன்புக்கு எம்மாத்திரம் ?
என் ஜீவன், செல்வம், சுகமும்
மா நேசருக்குப் பாத்தியம்.

5 மாகஸ்தியால் சம்பாதித்து
பேரருள் தந்த யேசுவே !
யாராலும் என்றும் உமக்கு
ஸ்தோத்திரம் உண்டாகவே !

55 S. & S. 126.

" Oh ! sacred head once wounded."

1 இரத்தம் காயம் குத்தும்
நிறைந்து, நிந்தைக்கே
முட்கிரீடத்தாலே சுற்றும்
குத்துண்ட சிரசே,
முன் திவ்விய மேன்மை கொண்ட
நீர் லச்சை காண்பதேன் ?
ஐயோ! வதைந்து நொந்த
உம்முன் பணிகிறேன்.

2 நீர் பட்ட வாதையாவும்
என் பாவப் பாரமே ;
இத்தீங்கும் நோவும் சாவும்
என் குற்றம், கர்த்தரே.
இதோ! என்றைக்கும் சாக
நான் பாத்திரன் ஆனேன்;
ஆனாலும் நீர் அன்பாக
என்னைக் கண்ணோக்குமேன்.

3 நான் உம்மைத் தாழ்மையாக
வணங்கி, நித்தமே
நீர் பட்ட கஸ்திக்காக
துதிப்பேன், யேசுவே.
நான் உம்மில் ஊன்றி நிற்க
சகாயராய் இரும் ;
உம்மோடு நான் மரிக்க.
கடாட்சித்தருளும்.

---

56 S. & S. 316.

" Sweet the moments, rich in blessing."

1 பாவ நாசர் பட்ட காயம்
பார்த்துணர்ந்துகொள்வது

சுத்தம், செல்வம், நற்சகாயம்,
சமாதானம் உள்ளது.

2 ரத்த வெள்ளம் பாய்ந்ததாலே
அன்பின் வெள்ளம் ஆயிற்று:
தேவ நேசம் அதினாலே
மானிடர்க்குத் தோன்றிற்று.

3 ஆணி பாய்ந்த மீட்பர் பாதம்
தஞ்சம் என்று பற்றினேன்;
அவர் திவ்ய நேச முகம்
அருள் வீசக் காண்கிறேன்.

4 பாசத்தால் என் நெஞ்சம் பொங்கி
துக்கத்தால் கலங்குவேன்;
அவர் சாவால் துக்கம் மாறி
சாகா ஜீவன் அடைவேன்.

---

57 C. M. C. H. 70.

" Wither with this crushing load ? "

1 எங்கே சுமந்து போயினீர்
சிலுவையைத்தானே?
என் பாடுபட்டு மரித்தீர்,
மாசற்ற மீட்பரே?

2 கல்வாரி மேட்டிலெனக்காய்
அவஸ்தைப்பட்டீரே;
நான் அதை எண்ணிப் பக்தியாய்
ஜீவிக்கச் செய்யுமே.

3 நீர் பட்ட பாடும் துக்கமும்
வாக்குக் கெட்டாததே;
இவ்வன்பை நான் எக்காலமும்
நினைத்துக்கொள்வேனே.

4 என் நெஞ்சில் உம்மை ஊக்கமாய்
நான் சிந்தை செய்யவும்,

நல்லாவியை நீர் நேசமாய்
கடாட்சித்தருளும்.

---

58 C. H. 72.
C. M.

"His dying love."

1 மா வாதைப்பட்ட யேசுவே
அன்பின் சொருபம் நீர்;
நிலைறந்த உம்தன் அன்பிலே
நான் மூழ்க அருள்வீர்.

2 தேவன்பின் ஆழம் அறிய
விரும்பும் அடியேன்,
நீர் பட்ட கஸ்தி ஒழிய,
வேறொன்றும் அறியேன்.

3 என் மீட்பர் ஜீவன் விட்டதால்
பூமி அசைந்ததே;
கன்மலை அதைக் கண்டதால்
பிளந்து விட்டதே.

4 அவ்வண்ணமாய் என் நெஞ்சத்தை
பிளந்து தேவரீர்,
உமது சாவின் பலத்தை
உணர்த்தக்கடவீர்.

5 துராசை நீங்கத் தக்கதாய்
தேவன்பை ஊற்றிடும்;
கற்போன்ற நெஞ்சை மெழுகாய்
உருகச்செய்திடும்.

---

59 H. A. & M. 21.

"He became a curse for us."

1 அதோ, குருசின் மீதில்
பாடுற்று நமக்காய்
மரிக்கிறார், நம்பேரில்

இணையில்லா அன்பாய்:
கிறிஸ்து சகித்த நிந்தையை
கண்ணோக்குங்கள், நாங்களே.

2 நாம் கை கால் கட்டப்பட்டு
நியாயத்தீர்ப்பிலே
கார் இருளில் தள்ளுண்டு
கிடத்தல் நியாயமே.
முடிவில்லாச் சந்தோஷத்தை
பெறுமற்போனால் நீதியே.

3 அதற்கு நாங்கள் தப்பி
பிழைக்கத் தேவரீர்
துன்மார்க்கர் கைக்குள்ளாகி
சிலுவை சுமந்தீர்;
மரத்தில் சாபமாகி, நீர்
எத்தீமையையுந் தாங்கினீர்.

4 கர்த்தாவே, நீர் பகைக்கும்
எல்லாப் பொல்லாங்கையும்
துர்ச் சிந்தனைகளையும்
வெறுத்துத் தள்ளவும்,
சிலுவையில் அறையவும்
அனுக்கிரகித்திரட்சியும்.

---

60 H. A. & M. 121.

"Into Thy hands I commend my spirit."

1 இப்போது, நேச நாதா, தலை சாய்த்து
தெளிந்த அறிவோடு ஆவியை
ஒப்புவித்தீர் பிதாவின் கரமீது;
பொங்கு நெஞ்சம் மூச்சற்றொடுங்கிற்றே.

2 சாமட்டுஞ் சாந்தமாய் என் துக்கபாரம்,
நீர் தாங்கி, மனதார மரித்தீர்;

உம் சாவில் பெலன் உற்றே, ஆவியையும்
அமைதலாய்த் தந்தைக் கொப்புவித்தீர்.

3 நல் மீட்பரே சாவிருள் என்னைச் சூழ்ந்து,
மரண அவஸ்தை உண்டாகையில்,
தொய்யும் ஆவியில் சமாதானம் ஈந்து,
ஒளி உண்டாக்கும் அச்சராவினில்.

4 நான் மாளும்போது சிலுவையைக் காட்டும்;
என் தலையை உம்மார்பில் அணைத்தே,
என் கடை மூச்சை அன்பாய் ஏற்றுக்கொள்ளும்;
அப்பால் உர் நித்திய ஓய்வு என்பதே.

---

61 S. & S. 630.

"Alas and did my Saviour bleed?"

1 கண்டீர்களோ சிலுவையில்
தொங்குண்ட யேசுவை?
கண்டீர்களோ காயங்களில்
சொரிந்த ரத்தத்தை?

2 "மன்னியும்" என்ற வேண்டலை
கேட்டீர்களோ ஐயோ!
"என் கைவிட்டீர்" என்றோலத்தை
மறக்கக் கூடுமோ?

3. கண் மூட தலை சாய்ந்தது,
"முடிந்த" தென்றாரோ;
இவ்வண்ணமாய் நடந்தது;
லோகத்தின் மீட்சியே.

4 அவ்வேண்டல், ஓலம் காயமும்
எப்போதும் தோன்றுமாம்;
ஆ, பாவி! பார் எத்தினமும்;
அத்தால் ஈடேற்றம் ஆம்.

5 ஆ மாண்டேனே என் பாவத்தில்,
பார்ப்பேன் அக்காட்சியை;

கண்டேன், கண்டேன் சிலுவையில்
தொங்குண்ட யேசுவை.

---

62 S. & S. 695.

"He gave Himself for me"

1 மரித்தாரே என் ஆண்டவர்
சிலுவையில் தானே,
மரித்தாரே என் ரட்சகர்,
ஆ! எனக்காகவே,
நான் எண்ணி எண்ணி வருகில்
என் நேசம் ஊக்கமாய்
கொழுந்துவிட்டு நெஞ்சத்தில்
எரியும் பக்தியாய்.

2 மரத்தில் தொங்கி ஜீவனை
விட்டார் என் யேசுவே,
உனக்குத்தான் இப்பலியை
கொடுத்தார், பாவியே.

3 என் மீட்பர் யேசு கிறிஸ்துதாம்
இவ்வருள் செய்தாரே,
நான் என்ன பதில் செய்யலாம்?
தகுதி இல்லையே.

4 என் தேகம், செல்வம், சுகமும்
என் ஜீவன் யாவுமே
சுகந்த பலியாகவும்
படைப்பேன், யேசுவே.

---

63 H. A. & M. 114.

"Oh! come and mourn with me awhile." L. M.

1 துக்கங்கொண்டாட வாருமே,
பாரும்! நம் மீட்பர் மரித்தார்;
திகில் கலக்கங் கொள்ளுவோம்;
இயேசு சிலுவையில் மாண்டார்.

2 போர்வீரர், யூதர் நிந்தித்தும்
மா பொறுமையாய்ச் சகித்தார்;
நாமோ புலம்பி அழுவோம்;
இயேசு சிலுவையில் மாண்டார்.

3 கை, காலை ஆணி பீறிற்று,
தவனத்தால் நா வறண்டார்;
கண் ரத்தத்தாலே மங்கிற்றே;
இயேசு சிலுவையில் மாண்டார்.

4 நரர்க்காய்த் திவ்விய அன்பினால்
மா மௌனமாய் மன்றாடினார்;
நல் ஏழு வார்த்தை உரைத்து,
இயேசு சிலுவையில் மாண்டார்.

5 அவர் விலாவில் உதிரம்
திவலையாய் நம்மேல் விட்டார்;
அவர் பாதத்தைப் பணிவோம்;
இயேசு சிலுவையில் மாண்டார்.

6 ஆ இயேசு நாதா, தாசர்க்கு
பெருகிப் பாய்ந்திடுங் கண்ணீர்,
உருகும் நெஞ்சும் ஈயுமே.
நீர் சிலுவையிலே மாண்டீர்.

---

64 7, 6, 7, 6. H. A. & M. 115.

"Father, forgive them."

1 கூர் ஆணி தேகம் பாய
மா வேதனைப்பட்டார்;
'பிதாவே, இவர்கட்கு
மன்னிப்பீயும்' என்றார்.

2 தம் ரத்தஞ் சிந்தினோரை
நல் மீட்பர் நிந்தியார்;
மா தேவ நேசத்தோடு
இவ்வாறு ஜெபித்தார்.

3 எனக்கே அவ்வுருக்கம்,
எனக்கே அச்செபம்,
அவ்வித மன்னிப்பையே
எனக்கும் அருளும்.

4 நீர் சிலுவையில் சாக
செய்ததென் அகந்தை;
கடாவினேன், இயேசுவே,
நானுங் கூர் ஆணியை.

5 உம் சாந்தக் கண்டிதத்தை
நான் நித்தம் இகழ்ந்தேன்;
எனக்கும் மன்னிப்பீயும்,
எண்ணாமல் நான் செய்தேன்.

6 ஆ இன்பநேச ஆழி!
ஆ, திவ்விய உருக்கம்!
நிந்திப்போர் அறியாமல்
செய்பாவம் மன்னியும்.

---

65 H. A. & M. 116.

"Lord, remember me."

1 'உம் ராஜ்யம் வருங்காலை, கர்த்தரே,
அடியேனை நினையும்' என்பதாய்
சாகுங் கள்ளன் விஸ்வாச நோக்காலே
தேவாட்சி கண்டு சொன்னான் தெளிவாய்.

2 அவர் ஓர் ராஜா என்று சொல்லுவார்
எவ்வடையாளமுங் கண்டிலாரே;
தம்பெலனற்ற கையை நீட்டினார்;
முட்கிரீடம் நெற்றி சூழ்ந்து பீறிற்றே.

3 ஆனாலும், மாளும் மீட்பர் மா அன்பாய்
அருளும் வாக்கும் நீயும் என்னுடன்
மெய்யாக பரதீஸிலிருப்பாய்'
என்பதுவாம்—விஸ்வாசத்தின் பலன்.

4 ஆனாலும், என் பாவம் நினையாதேயும்,
உம் ரத்தத்தால் அதைக் கழுவினீர் ;
உம் திருச்சாவால் பாவ மன்னிப்பும்
ரட்சிப்பும் எனக்காய்ச் சம்பாதித்தீர்.

5 'என்னை நினையும்;' ஆனால், உமக்கும்
என்னால் உண்டான துன்பங் கொஞ்சமோ?
சிலுவை, நோவு, ரத்தவேர்வையும்,
சகித்த நீர், இவை மறப்பீரோ?

---

66 H. A. & M. 118.

"My God! why hast Thou forsaken me."

1 துயருற்ற வேந்தரே,
சிலுவை ஆசனரே,
நோவால் வாடும் முகத்தை
இருள் திரை மூடிற்றே ;
எண்ணிறந்த துன்பம் நீர்
மௌனமாகச் சகித்தீர்.

2 பலியாக மரிக்கும்
வேளை வரும் அளவும்,
மூன்று மணி நேரமாய்,
துணையின்றி மௌனமாய்
பேரிருளில் கர்த்தரே
குருசில் போராடினீர்.

3 தேவ ஏக மைந்தனார்,
அபிஷேக நாதனார்,
'தேவனே என் தேவனே,
என்னை ஏன் கைவிட்டீரே?'
என்றுரைக்கும் வாசகம்
கேள், இதென்ன அற்புதம்!

4 துயர் திகில் இருண்டே
சூழும்போது, தாசனை
கைவிடாதபடி நீர்

கைவிடப்பட்டிருந்தீர் ;
இக்கட்டில் சமீபம் நீர்
என்றிதாலே கற்பிப்பீர்.

---

67 T. C. H. 180.

"Christ died to save me."

1. இயேசு கிறிஸ்துவே,
பூதலத்திலே
கேட்டில் விழுந்தோர்க்கு ஞான
ஒளி, ஜீவன், மீட்புமான
இரட்சகர் நீரே,
இயேசு கிறிஸ்துவே.

2 என்னை மீட்க நீர்
ஜீவனை விட்டீர் ;
பாவம் யாவையுந் தொலைக்க,
ஆக்கினை எல்லாம் விலக்க,
எனக்காக நீர்
ஜீவனை விட்டீர்.

3 ஆஸ்தி ஜீவனும்
மற்ற யாவையும்
தேவரீருக்காய் வெறுக்க,
ஆசை நெஞ்சிலே இருக்க,
என்னை முழுதும்
ஆட்கொண்டருளும்.

4 உம் ஆளுகையில்
நித்ய ராஜ்யத்தில் ;
எனக்காய் நீர் ஆயத்தம் பண்ணும்
வாசஸ்தலம், நித்திய வாழ்வும்
எனக்களித்தே,
தேற்றும், இயேசுவே.

Christ—Resurrection.

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்.

68 — A. H. 283.

"Mary to the Saviour's tomb."

1 வைகறை இருக்கையில்
ஓடி வந்த மரியாள்
கல்லறையின் அருகில்
கண்ணீர் விட்டு அழுதாள்.
"என் தன் நாதர் எங்கேயோ?
அவர் தேகம் இல்லையே!
கொண்டு போனவர் யாரோ?"
என்று ஏங்கி நின்றாளே.

2 இவ்வாறேங்கி நிற்கையில்
யேசு, "மரியாள்," என்றார்;
துக்கங் கொண்ட நெஞ்சத்தில்
பூரிப்பை உண்டாக்கினார்.
தேவ வாக்கு ஜீவனும்,
தேவ நேசம் இன்பமே;
சுத்த சிந்தையோர் எல்லாம்
காட்சி பெற்று வாழ்வாரே.

---

69 — H. A. & M. 102.

"The strife is over the battle done."

1 அல்லேலூயா! அல்லேலூயா! அல்லேலூயா!
இப்போது போர் முடிந்தது,

சிறந்த வெற்றி ஆயிற்று,
ஜெய கெம்பீர நாள் இது.
அல்லேலூயா !

2 யேசு வெம் சாவை மேற்கொண்டார்,
பாதாள வாசல் திறந்தார்
உயர்ந்த நாமம் அடைந்தார்.
அல்லேலூயா !

3 இந்நாள் எழுந்த வேந்தரே,
என்றைக்கும் அரசாள்வீரே,
களித்து ஆர்ப்பரிப்போமே.
அல்லேலூயா !

4 எல்லாரும் உம்மைப் போற்ற நீர்
மரித்துயிர்த்திருக்கிறீர்,
சாகாத ஜீவன் அருள்வீர்.
அல்லேலூயா !

---

70 S. & S. 158.

"Jesus Christ is risen to-day."

1 இன்று கிறிஸ்து எழுந்தார்;
அல்லேலூயா !
இன்று வெற்றி சிறந்தார்;
அல்லேலூயா !
சிலுவை சுமந்தவர்
அல்லேலூயா !
ஜீவனை அடைந்தனர்.
அல்லேலூயா !

2 அவர் வெற்றி கூறுவோம்,
அல்லேலூயா !
விண்ணின் வேந்தைப் போற்றுவோம்.
அல்லேலூயா !

அவர் தாழ்ந்துயர்ந்தாரே ;
அல்லேலூயா !
மாந்தர் மீட்பர் ஆனாரே.
அல்லேலூயா !

3 பாடனுபவித்தவர்,
அல்லேலூயா !
ரட்சிப்புக்குக் காரணர் ;
அல்லேலூயா !
வானில் வீற்றிருக்கிறார் ;
அல்லேலூயா !
மத்தியஸ்தம் செய்கிறார்.
அல்லேலூயா !

71

C. H. 81.
L. M.

"The day of victory."

1 இந்நாளே க்றிஸ்து வெற்றியை
அடைந்து தம் பகைஞரை
சிறை பிடித்துக் கொண்டுபோம்
ஜெய நாள் என்று பாடுவோம்.
அல்லேலூயா !

2 பிசாசு, பாவம், நரகம்,
எக்கேடும் இன்றையத்தினம்
எழுந்த க்றிஸ்தின் காலுக்கு
கீழாக வீழ்ந்து கெட்டது.
அல்லேலூயா !

3 இந்நாளில் சீஷர் கர்த்தரின்
அற்புதக் காட்சி கண்டபின்
துக்கித்தவர்கள் நெஞ்சுக்கு
சந்தோஷப் பூரிப்பாயிற்று.
அல்லேலூயா !

4 கர்த்தாவே, எங்கள் நீதிக்காய்
நீர் எழுந்தீர் கெம்பீரமாய்;
வெற்றி சிறந்த உமக்கே
மா ஸ்தோத்திரம் உண்டாகவே!
அல்லேலூயா!

72

H. A. & M. 232.

"He rose again the third day."

1 சபையாரே, கூடிப்பாடி,
கர்த்தனை நாம் போற்றுவோம்;
பூரிப்பாய் மகிழ் கொண்டாடி,
களிகூரக்கடவோம்.
யேசு க்றிஸ்து
சாவை வென்று எழுந்தார்.

2 சிலுவையில் ஜீவன் விட்டு,
பின்பு கல்லறையிலே
தாழ்மையாக வைக்கப்பட்டு
மூன்றாம் நாள் எழுந்தாரே.
லோக மீட்பர்
வெற்றி வேந்தர் ஆனாரே.

3 மீட்பரே, நீர் மாட்சியாக
ஜீவனோடெழுந்ததால்
நாங்கள் நீதிமான்களாக
கர்த்தர் முன்னே நிற்பதால்,
என்றென்றைக்கும்
உமக்கே மாஸ்தோத்திரம்!

4 சாவின் ஜெயம் ஜெயமல்ல;
தேகம் மண்ணாய்ப் போயினும்
எல்லாம் கீழ்ப்படுத்த வல்ல

கர்த்தர் அதை மீளவும்
ஜீவிப்பித்து
மறுரூபமாக்குவார்.

---

73 S. & S. 329.

"The empty grave."

1 தேவ மைந்தனானவர்,
யேசு என்னும் ரட்சகர்,
திவ்விய சத்துவத்தினால்
கல்லறையை விட்டதால்.

2 சாபம், துன்பம் யாவையும்
நீக்கி, சுக வாழ்வையும்
மாந்தர்க்கீந்து ரட்சித்தார்;
வெற்றி வேந்தர் ஆயினர்.

3 ஆதலால் இந்நன்மையை
ஈந்த உங்கள் மீட்பரை
வாஞ்சையோடு நாடுங்கள்,
ஏற்றுக்கொண்டு பாடுங்கள்.

4 யேசு, உம்தன் ஆவியை
ஈந்து, திவ்ய ரட்சிப்பை
எங்குமுள்ள மாந்தரும்
காண நீர் கடாட்சியும்.

5 ஆண்டவர்க்கு ஸ்தோத்திரம்!
அல்லேலூயா! கீர்த்தனம்!
மீட்கப்பட்ட கூட்டத்தார்
என்றும் உம்மை வாழ்த்துவார்.

---

74 T. S. S. 5.

"The happy day of Resurrection."

1 ஓ மா சுத்த—கதியுற்ற
கிறிஸ்தெழுந்த நன்னாள் இதே!
மாந்தர் கட்டுண்டோர்,
கிறிஸ்தோ எழுந்தோர்,
மகிழ், மகிழ், மெய்ச்சபையே!

2 ஓ மா சுத்த—கதியுற்ற
கிறிஸ்தெழுந்த நன்னாள் இதே!
சாவை ஜெயித்தார்,
ஜீவன் அளித்தார்,
மகிழ், மகிழ், மெய்ச்சபையே!

3 ஓ மா சுத்த—கதியுற்ற
கிறிஸ்தெழுந்த நன்னாள் இதே!
சீராய்ப் பிழைக்கும்
பெலன் கிடைக்கும்,
மகிழ், மகிழ், மெய்ச்சபையே!

---

75 H. M. 44.

"They rolled the stone away."

1 வைகறை காலையிலே
வைத்திருந்த ஏசண்டை
கையில் வர்க்கங் கொண்டுமே
தயை மேரி வந்தாளே
துக்கத்தால் இல் விட்டவள்
சினேகிதனைக் கண்டாள்
கல்லை யார் புரட்டுவார்கள்
எல்லவருஞ் சொன்னார்கள்
ஜோதி ஜோதி தூதர்
காலே வைகறையிலே
ஜோதி ஜோதி தூதர்
கல்லைப் புரட்டினரே

2 தூய வெண்ணாடை போர்த்த
தூத ரிருவரையும்
அடக்கச் சிலையையும்
அவர் நடுங்கப் பார்த்தார்
தூதர் கல்லைப் புரட்ட
நாதர் மரணக் கட்டை
மேற்கொண்டதா லவரையே
பார்க்கக் கூடவில்லையே.

3 துக்க இதயமுள்ள
மேரி மிக நொந்தழ
எங்கவரை வைத்தாரோ !
என்க தூதர் சொன்னாரே
அவரெழுந்தனரே
முன்னுரைத்தபடியே
சென்று கலிலேயாவிலே
காண்பீர் நித்ய ஜீவியாய்.

4 சாவின் கட்டை முறித்தார்
பாதாள வெற்றி கொண்டார்,
மீட்க வல்லரவரே
தாழ் கோலுடையவரே
என் கைகளைப் பாருங்கள்
ஜீவாதிபதி யுங்கள்
ராயன் குழி நின்று மீட்பார்
சம்பத்தைக் கொண்டுவாருர்.

Christ—Ascension and Intercession.

கிறிஸ்துவின் பரமேறுதலும் பரிந்துபேசுதலும்.

76 T. C. H. 86.

L. M.

" Rejoice all ye saints."

1 மகிழ், கர்த்தாவின் மந்தையே;
மகா கெம்பீரத்துடனே
பரத்துக்குன் அதிபதி
எழுந்து போனதால் துதி.

2 விண்ணோர் குழாம் கெம்பீரமாய்
கொண்டாடி, மா வணக்கமாய்
பணிந்து யேசு ராயர்க்கு
புகழ் செலுத்துகின்றது.

3 ஆ யேசு, தேவ மைந்தனே,
கர்த்தா, பர்த்தா, முதல்வரே,
அடியார் நெஞ்சு உமக்கு
என்றைக்கும் சொந்தமானது.

4 விண்ணோரைப்போல் மண்ணோர்களே,
நம் ஆண்டவரை என்றுமே
அன்பாகக் கூடிப் பாடுங்கள்,
அவரின் மேன்மை கூறுங்கள்.

77 S. & S. 154.

"Arise my soul arise."

1 திடம் என் நெஞ்சமே,
குற்றபயம் நீக்கு ;
இரத்தப் பலியே
உன் பதிலாய் நோக்கு;
ஆசனமுன் மீட்பர் நிற்பார்
என் பேர் தம் கையிற் பதித்தார்.

2 என்றும் மேற்சீவிப்பார்,
எனக்காய் ஜெபிக்க,
சர்வம் மீட்கும் நேசர்,
தம் இரத்தம் கூற ;
மாந்தர் மீட்பின் அவ்விரத்தம்
தெளிப்பார் கிருபாசனம்.

3 செந்நீர்க் காயம் ஐந்தும்
கல்வாரி தோற்றுமே ;
அவைபெலச் செபம்
"எனக்காய் ஊற்றுமே ;
அவனை மன்னியும்" என்னும்
பாவிசாக விடாதிரும் !

4 பிதா அன்பாய் கேட்டார்
அபிஷேகன் ஜெபம் ;
அவர் தள்ளமாட்டார்
தம் மைந்தன் சமுகம் ;
இரத்தம் ஆவியும் ஒன்றாய்
சொல்லும் "நீ தேவிற் பிறந்தாய்."

Christ—Adoration.

கிறிஸ்துவை வணங்குதல்

78 S. & S. 203.

"All hail the power of Jesus name."

1 யேசுவின் இன்ப நாமத்தை
எல்லாரும் போற்றுங்கள்;
விண்ணோர்கள் போல அவரை,
"நீர் வாழ்க!" என்னுங்கள்.

2 பிசாசினின்று மாந்தரை
மீட்டோரைப் போற்றுங்கள்;
ஒப்பற்ற நேசர் அவரை,
"நீர் வாழ்க!" என்னுங்கள்.

3 எல்லாரும் அருள் நாதரை
மகிழ்ந்து போற்றுங்கள்
ஜீவாதிபதி அவரை,
"நீர் வாழ்க!" என்னுங்கள்.

4 அவரை பார்க்கும்பொழுது
ஓயாமல் போற்றுவோம்;
நம் மீட்பர் பாதம் பணிந்து,
"நீர் வாழ்க!" என்னுவோம்.

79 T. S. S. 35.

"How bright appears the Morning Star."

1 மகா அருளின் ஜோதியை
வீசும் மெய்ச் சுடர் எத்தனை
ப்ரகாசமாய் விளங்கும்!
தாவீதின் மைந்தன் யேசுவே,
நீர், நீர் என் நேச நாதனே,
என் பொக்கிஷம், என் பங்கும்:
முற்றும் சுற்றும்
தயவாலும் உண்மையாலும்
நீர் நிறைந்தோர்,
மேன்மை நாமமும் அடைந்தோர்.

2 என் முத்தே, என் கிரீடமே,
உம்மோடு, தேவ மைந்தனே,
நான் ஐக்யமாக வேண்டும்;
உயர்ந்த ராஜா, உமது
நற் சுவிசேஷம் எனக்கு
அமிர்தம் பாலும் தேனும்;
ஐயா, மெய்யா,
தேவ ரூபே, வாடா பூவே,
நீரே யாவும்
ஜீவ ஊற்றும் மெய் மன்னாவும்.

3 மகிழ்வேன், என் சிநேகிதர்
அல்பா ஒமேகா என்பவர்,
என் நேசர், ஆதி அந்தம்;
இனி நித்யானந்தத்திலே
நான் அவரண்டை சேர்வேனே,
என் பாக்கியம் அநந்தம்:
ஆமென், ஆமென்!
வா, ரட்சிப்பே, வா, வெற்றியே,
உனக்காக
வாஞ்சை ஆனேன், சேர்வாயாக.

80 S. & S. 227.

"Jesus! Lover of my soul."

1 யேசு! நேச நாயகா!
வெள்ளம் போன்ற துன்பத்தில்
திக்கில்லா உம்மேழை நான்
தடுமாறிப் போகையில்,
திக்கில்லாமல், மீட்பரே!
திவ்வியமார்பில் காருமேன்.
அந்ததிவ்ய நாட்டிலே
சேர்த்து பாக்யம் தாருமேன்.

2 தேவரீர் நற்ருள் அல்லால்
வேறே தஞ்சம் இல்லையே.
கைவிடாமல், நேசத்தால்
ஆற்றித் தேற்றித் தாங்குமே
என்னைப் பலப்படுத்தும்.
சமய சகாயர் நீர்.
செட்டை நிழல்தனிலும்
மறைத்துக் காப்பாற்றுவீர்.

3 உம்தன் வல்ல ஆவியால்
பாவமறக் காத்திடும்.
தூயதிரு ரத்தத்தால்
என்னைச் சுத்தமாக்கிடும்.
ஜீவ ஊற்று! யேசுவே!
என்தன் தாகம் தீருமேன்,
நித்தம் ஊறி என்னிலே
என்றும் க்ரியை செய்யுமேன்.

---

81 S. & S. 237.

"Rock of ages."

1 பிளவுண்ட மலையே!
புகலிடம் தாருமேன்;
பக்கம் பட்ட காயமும்,

பாய்ந்த செந்நீர் வெள்ளமும்,
பாவ தோஷம் யாவையும்
நீக்கும்படி அருளும்.

2 கண்ணீர் நித்தம் சொரிந்தும்,
தொய்யாத் தவம் புரிந்தும்,
பாவம் நீங்க மாட்டாதே;
நீரே மீட்பர், யேசுவே!
உம்மை நித்தம் அடியேன்
தஞ்சமென்று சாருவேன்.

3 நிழல் போன்ற வாழ்விலே
கண்ணை மூடும் சாவிலே,
உம் ரண்டாம் வருகையில்
நடுத்தீர்வைத் தினத்தில்,
பிளவுண்ட மலையே!
புகலிடம் தாருமே.

---

32 S. & S. 723.

"What shall I render to my God."

1 உலகின் வாஞ்சையான
என் ஸ்வாமி யேசுவே,
நான் உம்மை ஏற்றதான
வணக்கத்துடனே
சந்திக்கச் செய்வதென்ன?
நான் தேவரீருக்கு
செலுத்த உமக்கென்ன
பிரியமானது?

2 நான் யாதொரு கதியும்
இல்லாதவனுமாய்,
நிர்பந்தமும் பயமும்
நிறைந்தவனுமாய்

இருந்த போதன்பாக
நீர் என்னை நோக்கினீர்,
நீரே என் மீட்புக்காக
இவ்வுலகில் வந்தீர்.

3 கட்டுண்டு நான் கிடந்தேன்,
என் கட்டை அவிழ்த்தீர்;
இகழ்ச்சியைச் சுமந்தேன்,
நீர் அதை நீக்கினீர்;
நீர் என்னை மேன்மையாக்கி,
என் ஆத்துமத்திலே
சம்பூரணமுண்டாக்கி
ரட்சிக்க வந்தீரே.

4 வியாகுலம் அடைந்த
நரரின் கூட்டமே,
இக்கட்டினால் நிறைந்த
நிர்ப்பந்த மாந்தரே.
இதோ! சகாயர் வந்தார்;
கர்த்தர் கெட்டோருக்கு
ரட்சகரைத் தந்தார்,
அதால் மகிழ்ந்திரு.

5 பொல்லாதவர்களுக்கு
மா ஆக்கினைகளும்,
நல்லோரின் கூட்டத்துக்கு
அனந்த பூரிப்பும்
முடிவிலே உண்டாக
அந்நாள் வருவாரே;
ஆம் எங்கள் மீட்புக்காக
நீர் வாரும் யேசுவே.

83 H. A. & M. 199.

"Thou art the Way by Thee alone."

1 மெய் வழி நீரே, யேசுவே,
நீர் பாவ நாசராம் ;
பிதாவிடத்தில் சேர்வதே
உமதிரக்கமாம்.

2 சத்தியம் நீரே, ஆகையால்
உம் வாக்கு ஞானமே ;
என் நெஞ்சில் அதின் ஜோதியால்
வெளிச்சம் தோன்றுமே.

3 நீரே என் ஜீவன், உம்மிலே
பிழைத்தசைகிறேன் ;
உமக்குப் பிரியமாகவே
நடந்துகொள்ளுவேன்.

4 நீரே வழியும் சத்தியமும்
ஜீவனும் ஆனவர் ;
உம்மையே நம்பும் யாவரும்
பிழைத்து வாழுவர்.

---

84 S. & S. 147.

"Thou art the bread of life."

1 நீர் ஜீவ அப்பம் ; பஞ்சத்தில்
உம்மால் என் பசி ஆறும் ;
நான் போம் வனாந்தரங்களில்
என் உள்ளம் உம்மை நாடும் ;
பிதாவின் ஈவாம் மன்னாவே,
நீர் என்னைப் பாவ இச்சைக்கே
விலக்கிக் காத்துக்கொள்ளும்.

2 நீர் ஜீவ ஊற்று ; உம்மாலே
என் ஆத்தும தாகம் தீரும்,
நீர் தரும் ஈவு நித்தமே

சுரக்கும் தண்ணீராகும்;
நீரூற்றாய் என்னில் ஊறுமேன்,
நிறைவாய் நித்தம் தாருமேன்
ஆரோக்கியமும் நீரும்.

3 நீர் என்னை ஜோடிக்கும் உடை;
நீர் என் அலங்கரிப்பு;
நான் உம்முடைய நீதியை
அணிவதென் விருப்பு;
பூலோகத்தின் சிங்காரமாம்
விநோத சம்பிரமம் எல்லாம்
என் ஆவிக்கு வெறுப்பு.

4 நீர் நான் சுகித்து தங்கிற
அரமனையும் வீடும்;
புசல் அடித்தும் விருதா,
பேய் வீணாய் என்னைச்சீறும்;
நான் உம்மில் நிற்பேன், ஆகையால்
கெடேன்; பொல்லார் எழும்பினால்
நீர் என் வழக்கைத் தீரும்.

5 என் மேய்ப்பராய் இருக்கிறீர்,
என் மேய்ச்சலும் நீர் தாமே;
காணாமல்போன என்னை நீர்
அன்பாக மீட்போராமே;
இவ்வேழை ஆட்டை என்றைக்கும்
நீர் பாதுகாத்துப் போஷியும்
நான் உம்முடையோனாமே.

6 நீரே நான் என்றும் வாஞ்சிக்கும்
மா நேசமுள்ள நாதர்;
நீரே என் ஆசாரியரும்
பலியுமான கர்த்தர்;

நீர் என்னை ஆளும் ராஜாவும்,
உம்மாலே எந்தப் போரிலும்
ஜெயிப்பேன் மா, சமர்த்தர்.

---

85 **A. H. 551.**

"Oh! boundless salvation."

1 அளவில்லா மீட்பே அன்பின் ஆழியே
யேசுவால் வந்தபூரண தயவே!
உலகெல்லாம் மீட்கும் பாக்கியத் திரள்!
யாவர்க்காயும் பாயும் நீ என்மேல் புரள்.

2. பாவங்கள் ஏராளம் கறை நிறைந்தேன்
மனங்கசந்து நான் கண்ணீர் சொரிந்தேன்
அழுகை வீணம்ரத் தாம்பரக்கடல்!
அலை சுத்திசெய்யும் வா என்மேல் புரள்.

3 ஆசைகள் அகோரம் கோபம் கொரேம்
உள்ளத்தை ஆளுது தீமையின் உறம்
உன் அலைகளின் கீழ், ஓ! பெருங்கடல்!
மீட்புத் தோன்றுதிதோ வா என் மேல் புரள்.

4 சோதனைகள் மோத பயங்கள் சூழ
பாழாச்சுதென் ஜீவன் சுகங்கள் மாள
மெய்யாய் இனிச் சுகம் சுத்த நீர்கடல்!
என்னிற்றேற்றி வைப்பாய் வா என்மேல் புரள்.

5 தயாசாகரமே வாஞ்சையாய் நின்றேன்
ஜீவிக்கும் ஆச்சர்ய அலை ஓரம் நான்
திரும்ப வந்தேன் கறை போக்கும் கடல்!
உன்னை விட்டு போகேன் வா என்மேல் புரள்.

6 புரண்டுவரும் அலைகளைத் தொட்டேன்
"மீட்கவல்லோன்" என்னும் இரைச்சல் கேட்டேன்

மீட்படைவேனென்று நம்பி உன் நீரில்
இதோ மூழ்கிறேன் நான், வா என்மேல் பூரள்.

7 அல்லேலூயா! இனி என் ஜீவகாலம்
அவர் துதியிலேயே மகிழ் கொள்ளும்
அளவில்லா மீட்பாம் கடல் நமக்காய்,
நெஞ்சை திறந்தார் புரளும்படியாய்!

---

86 T. S. S. 23.

"I will joy in the Lord."

1 உன்னதமான
மா இராசாவான
சீர் சிறந்த இயேசுவே
உம்மில் களித்து,
உம்மைத் துதித்து,
நேசித்துக் கொண்டிருப்பேனே.

2 பூ மலர்க் காடும்
பயிர் ஓங்கும் நாடும்
அந்தமும் சிறப்புமாம்,
இயேசுவின் அந்தம்
எனக்கானந்தம்.
என் மனதின் குளிர்த்தியாம்.

3 அண்டங்கள் யாவும்
சூரியன் நிலாவும்
அந்தமாய்ப் பிரகாசிக்கும்.
அவர் முன்பாக
மா ஜோதியாக
மினுங்குமெல்லாம் மங்கிப்போம்.

4 விண் மண்ணுடைய
மகிமை மறைய
அவர் அந்தமானவர்.
வானத்திலேயும்
பூமியிலேயும்
நான் நாடினோர் என் ரட்சகர்.

---

87 S. R. L. 7.

"Redeemed."

1 என் மீட்பர் ரத்தத்தினாலே
நான் பூரண மீட்படைந்தேன்;
ஒப்பற்ற மா கிருபையாலே
நான் சர்த்தரின் பிள்ளையானேன்.
மீட்டார்...மீட்டார்
தம ரத்தத்தால் என்னை மீட்டார்.
மீட்டார்...மீட்டார்
இப்பாவியை ஆளாக்கினார்.

2 என் உள்ளத்தில் வாக்குக்செட்டாத
சந்தோஷத்தைத் தந்து விட்டார்,
என்னோடவர் தங்க, நீங்காத
பேரானந்தம் பொங்கச் செய்வார்.

3 ரட்சா பெருமானை ஓயாமல்
தியானிப்பேன் ரம்மியமாய்.
பேரன்பை இடைவிடாமல்
நான் போற்றுவேன் மகிழ்ச்சியாய்.

4 மா வேந்தனும் என்தன் ராஜாவை
நான் சீக்கிரம் கண்டுகொள்வேன்.
அன்பாய் என்னைக் காக்கும் கர்த்தாவை
சதா காலம் ஸ்தோத்திரிப்பேன்.

Holy Spirit.

பரிசுத்த ஆவி.

88 A. H. 336.

"Give thy Holy Spirit."

1 பிதாவே, உமதாவியை
அன்பாய் அனுப்பி பலனை
அடியாருக்கு ஈந்திடும்,
நற் சீரைத் தந்திரட்சியும்.

2 கெட்டோம், திருப்ப ரட்சித்தீர்;
விழுந்தோம், மீட்புண்டாக்கினீர்;
இம்மீட்பை நாங்கள் பற்றவும்
மெய் விசுவாசம் தந்திடும்.

3 துன்பத்தை இன்பமாக்குவீர்,
இருளில் ஜோதி காண்பிப்பீர்;
மந்தாரம் மூடும் நாளிலே
அருளின் ஒளி வீசுமே.

---

89 S. & S. 191.

"Our blest Redeemer ere He breathed."

1 விண் ஏகுமுன் நல் வார்த்தையை
நம் மீட்பர் மொழிந்தார்;
மா நித்திய ஆறுதலை
வாக்களித்தார்.

2 அவ்வாறு வல்ல ஆவியே
சகாயராய் வந்தார்;
மெய்ப் பக்தர் நைந்த நெஞ்சிலே
சஞ்சரிப்பார்.

3 ஆகாத சிந்தை தோன்றினால்
மேலிடவே ஒட்டார்;
வீண் பயமும் மென் சொல்லினால்
அகற்றுவார்.

4 நற்குணம், செய்கை, விருப்பம்,
மெய்ப் பக்தி யாவுமே
தேவாவி யாலே மாத்திரம்
உண்டாகுமே.

5 மா தூய நேச ஆவியே,
தாசர்க்கிரங்குமேன் ;
சந்தாங்கம் தந்து நெஞ்சிலே
வந்தருளுமேன்.

---

90 S. & S. 287.

"Come thou fount of every blessing."

1 தரும் சுத்த ஆவி தாரும்,
எங்கள் ஆத்துமத்திலே
எங்களுக் குயிரைத் தாரும் ;
பரிசுத்த ஆவியே!
ஞான தீபம்
ஸ்வாமி நீரே ஏற்றுமே.

2 எங்கள் நெஞ்சில் நல்ல புத்தி
தேவ பக்தி தோன்றவே,
அதை நீர் குணப்படுத்தி,
தப்பு சிந்தையானதை
மாற்ற தாரும்,
நல்ல தேவ ஆவியே.

3 நீதி மார்க்கத்தில் எதிர்த்து
நிற்கும் எவ்விரோதமும்
நீங்க எங்களைக் காப்பாற்றி,
நல்லோராக்கியருளும்
கால் தள்ளாடி
போகில் நீரே ரட்சியும்.

4 நெஞ்சு என்னிலே கலங்கி,
நானே ! இரட்சியும்
என்று கெஞ்சும்போ திறங்கி
என்னைத் தேற்றிக்கொண்டிரும் !
துன்பம் நீங்க
நீர் சகாயராய் இரும்.

Holy Scriptures.

பரிசுத்த வேதாகமங்கள்.

91 A. H. 160.

" How precious is the book divine."

1 தேவாவியால் இரக்கமாய்
உண்டான வேதமே
உயர்ந்த ஞானமுள்ளதாய்
அருளப்பட்டதே.

2 அதில் பிறந்த போதனை
விளக்கைப்போலவே
கதிக்குப் போகும் மார்க்கத்தை
விளக்கிக் காட்டுமே.

3 இவ்வருள் வேதம் தந்ததால்,
கர்த்தாவே, உமக்கே
எந்நாளும் சர்வ சபையால்
புகழ் உண்டாகுமே.

---

92 S. & S. 5.

" Thou whose almighty word."

1 ஆதியில் இருளை
அகற்றி ஒளியை
படைத்த நீர்
வேதம் பரம்பவும்
லோகத்தார் யாவரும்
அவ்வொளி காணவும்
அருள் செய்வீர்

2 கருணை, சத்தியம்,
தயவு, இரக்கம்
நிறைந்த நீர்
பாவிக்கு ரட்சிப்பை,
பேதைக்கு ஞானத்தை
எல்லார்க்கும் ஒளியை
கடாட்சிப்பீர்.

3 நித்திய ஆவியே.
சத்திய புருவே,
பூரணமாய்
தீமையை நீக்கவும்
நன்மையை நாட்டவும்
தாசரைத் தேற்றவும்
வாரும் அன்பாய்.

4 ஞானமுய பெலனும்
சர்வ ஆனந்தமும்
உள்ளவரே
கடலைப்போலவும்
அறிவும் உண்மையும்
பரம்ப அருளும்,
ஸத்தியேகரே.

93

H. A. & M. 104.

" His words are pure."

1 கர்த்தாவே, நாங்கள் நெஞ்சத்தில்
மெய்ஞ்ஞானமற்ற மாந்தர்;
நீர் புத்தியைத் தராவிடில்,
எப்போதும் புத்தியீனர்;
உம்மால் உண்டான வேதத்தால்,
உம், ஆவியின் சகாயத்தால்,
நற்பாதை காண வேண்டும்.

2 வேதத்துக்காக ஸ்தோத்திரம்
உமக்குண்டாவதாக;
உம் திரு வார்த்தையைத் தினம்
எல்லாரும் பக்தியாக
வாசித்து, கேட்டு, சிந்தித்து,
உட்கொள்ள நீர் கடாட்சித்து,
நல்லாவி நித்தம் ஈயும்

3 பிதாவே! எங்கும் ஜீவனும்
உம் வார்த்தை செல்வதாக;
ஆ இயேசுவே, நீர் சென்றதாம்
செந்நெறி செல்வோமாக,
நல்லாவியை எம் உள்ளத்தில்
இறக்கி, வார்த்தையால் அதில்
நற்சீர் அளித்துக்காரும்.

---

94 G. B. 473.

“Thou Best of Books, the Word of God.

1 மா மேன்மைபெற்ற வேதமே!
உன் ஜோதி வீசுதே.
உன் வாக்கை கேட்போர் சிந்திப்போர்
மா இன்பம் காண்பாரே.
ஓர் ஏற்ற வார்த்தை சொல்லுவாயே,
எத்தன்மையுள்ளோர்க்கும்,
ஆ! எல்லையில்லாச் செல்வமும்
உன்னாலே கிடைக்கும்.
என் பாதைகாட்டும் தீபமே,
என் வழிக் கொளியே,
என் ஜீவகாலம் என்னுடன்
ஒளியாய் செல்லவே.

2 மா கோபம் தப்ப ஓடிட
நீ புத்தி சொல்கிறாய்.
க்ருசெடுத்துப் பின்செல்வோர்க்கு
பேர் வாக்குக் கொடுத்தாய்—
“ஜீவாற்றில் பானம் பண்ணலாம்
மெய்வாஞ்சை யுள்ளோரே;
மா சுத்தர் பாக்யவான்களாம்”
என்றருள்கின்றாயே

3 உன் கண்டிப்பும் எச்சரிப்பும்
மா நன்மையானதே.

மெய்வாஞ்சை ஜெபத்தோடதை
நான் ஏற்றுக்கொள்வேனே
ஆ! மேன்மை பெற்ற வேதமே!
நிர்ப்பாக்யராவோமே,
உன் ஆறுதல் சந்தோஷமும்
மெய் வாழ்வும் இன்றியே.

---

95 S. & S. 357.

"Wonderful words of life."

1 காது குளிரப் பாடுங்கள்
கிருபா சத்தியம்
புத்தி தெளியக் காட்டுங்கள்
திவ்விய வசனம்.
வெல்க! சத்திய வேதம்.
வாழ்க! நித்திய வேதம்.
அமிர்தமே! அற்புதமே!
திவ்விய சத்தியம்.
அமிர்தமே! அற்புதமே!
திவ்விய சத்தியம்.

2 நல்ல செய்தியைக் கூறுமே,
கிருபாசத்தியம்.
பாவ நாசத்தைக் காட்டுமே,
திவ்விய வசனம்.
வானவருஷமாரி,
ஞான பொக்கிஷவாரி.

3 வேத நாயகர் பொழியும்
கிருபா சத்தியம்.
ஜீவ மங்கல மொழியும்
திவ்விய வசனம்.
யேசு! என்றனைப் பாரும்
நித்தம் என்றனைக் காரும்.

Sinner—Invitation and Warning.

பாவியின் அழைப்பும் எச்சரிப்பும்.

96 S. & S. 1153.

"Your Saviour is waiting."

1 ஓ பாவி உன் மீட்பர்
காத்து நிற்கிறார்
பாவத்தை விடு
வாயென்றழைக்கிறார்
என்ன! மா அன்பு
வைத்திட்டார் உன்னிலே
வர மாட்டாயா?
காத்தவர் நிற்கையில்.

2 பாவி! மீட்பர் உன்னைப்
பார்த்து நிற்கிறார்
உன்னாத்துமத்தின்
துயரை அறிவார்
பாவம் சாவு பயம்
எல்லாம் போக்குவார்
மீட்பரிடம் வா
காத்தவர் நிற்கிறார்.

3 உன்னை வாங்கினவர்
இது வரை உன்
எதிர் நோக்கினார்
இப்போதே ஓடிவா
காலம் தப்பிப்போனால்
அந்தகாரத்துள்
தள்ளப்படுவீர்
மீட்பரை விட்டென்றும்.

---

97 G. B. 181.

"Lo ! a loving friend is waiting."

1 ஆத்ம நேசர் ஆவல்கொண்டு
காத்து நிற்கிறார்.
"நீசபாவி வா என்னண்டை"
என்கிறார்.

2 பாடுபட்டேன் சிலுவையில்
மாண்டேன் உனக்காய்.
என் தன் மீட்பைத் தள்ளிடாமல்
நம்புவாய்.

3 பாவத்தால் நீ கட்டுண்டாலும்
ரட்சகர் நானே.
பூரிப்பாய் உன் மீட்பர் பின்னே
செல்வாயே.

4 நேசர் உன்னை மாறி மாறி
கூவி நிற்கிறார்.
பிராணநாதர் இன்ப சத்தம்
கேட்கப்பார்.

5 இப்போதே ரட்சண்ய காலம்,
தாமதியாதே.
மீட்பர் பாதம் அண்டிக்கொள்வாய்
இன்றைக்கே.

6 யேசுநாதா! இதோ வந்தேன்
எற்றுக்கொள்ளுமே.
பாவம் போக்கி நித்தியபாக்யம்
தாருமே.

98 S. & S. 443.

" Have you any room for Jesus."

1 யேசு மீட்பர் உன்தன் நெஞ்சில்
வாசம் பண்ண விடாயோ?
உன்தன் பாவம் சுமந்தோனை
இன்று ஏற்றுக் கொள்ளாயோ?
யேசு மகா ராஜர் இதோ,
வாசலண்டை நிற்கிறார்!
பாவி நீ இவ்வன்பை எண்ணி
வாசலை திறக்கப்பார்.

2 பாவம், லோகம், ஆசா பாசம்
யாவும் இடம் பெற்றதோ?
நீச சிலுவையில் மாண்ட
நேசர்க்கிடமில்லையோ?

3 இன்னுமே நீ தாமதித்தால்
பின்பு மோசம் வருமே.
இப்போதே ரட்சண்ய காலம்
அப்பால் பிந்திப் போகுமே.

4 கூவி நிற்கும் மீட்பர் சத்தம்
பாவி! கேட்டுத் திறப்பாய்.
உன்தன் ஜீவன், பெலன், யாவும்
இன்றே தத்தம் செய்குவாய்

---

99 S. & S. 372.

" There is a gate that stands."

1 அதோ! ஓர் ஜீவ வாசல்! பார்!
அவ்வாசலில் ஓர் ஜோதி;
பேரொளியாய்ப் பிரகாசிப்பார்
மங்காத அருள்ஜோதி.
ஆ! ஆழ்ந்த அன்பு இதுவே!
அவ்வாசல் திறவுண்டதே.
பாரேன்! பாரேன்!
பார்! திறவுண்டதே.

2 இவ்வழி உட்பிரவேசிப்போர்
கண்டடைவார் பேர்வாழ்வும்;
தாழ்வார், மேலோர், இல்லார், உள்ளோர்,
எவ்வர்ண தேசத்தாரும்.

3 அஞ்சாமல் அண்டிச் சேருவோம்;
அவ்வாசலில் உட்செல்வோம்;
எப்பாவம் துன்பும் நீங்கிப்போம்.
கர்த்தாவைத் துதிசெய்வோம்.

---

100 S. & S. 475.

"I hear Thy welcome voice."

1 வா! நீச பாவி வா,
என்றென்னைக் கூப்பிட்டீர்;
என் தோஷம் தீர ரக்ஷகா!
சுத்தாங்கம் பண்ணுவீர்.
அருள் நாயகா!
நம்பி வந்தேனே.
தூயதிரு ரத்தத்தால்
சுத்தாங்கம் பண்ணுமே.

2 சீர் கெட்ட பாவி நான்.
என் நீதி கந்தையே.
என்றாலும் உமதருளால்,
துர்க்குணம் மாறுமே.

3 மெய் பக்தி பூரணம்
தேவாவியாலுண்டாம்.
உள்ளான சமாதானமும்
நற்சீரும் பெறலாம்.

4 உண்டான நன்மையை
நீர் விர்த்தியாக்குவீர்.
இப்பாவகுணத் தன்மையை
நிக்ரகம் பண்ணுவீர்.

101 S. & S. 422.

"Knocking, knocking."

1 தட்டித் தட்டி நிற்கிறார்.
காத்துக்கொண்டிருக்கிறார்.
பரதேசிபோல வந்தும்
ராஜனாய் விளங்குறார்.
மனமே, இவ்வன்புணர்ந்து
கதவைத் திறக்கப் பார்!

2 தட்டித் தட்டி நிற்கிறார்.
காத்துக்கொண்டிருக்கிறார்.
நிலையோரம் புல் முளைத்து,
கீலும் துருப்பட்டது.
கதவசையாமல் தங்கி,
திறவாமற்போயிற்று!

3 தட்டித் தட்டி நிற்கிறார்,
காத்துக்கொண்டிருக்கிறார்;
குட்டப்பட்ட சிரசுள்ளார்!
காயப்பட்ட கைகள் பார்!
நேசப் பார்வையுற்ற மீட்பர்
இன்னும் காத்து நிற்கிறார்!

---

102 S. & S. 129.

"There is a fountain."

1 பூலோகத்தா ரெல்லோருக்கும்
ஓர் ஜீவவூற்றுண்டே.
எப்பாவ தோஷகுற்றமும்
நிர்மூல மாகுமே.

2 மா பாவியான கள்ளனும்
அவ்வூற்றில் மூழ்கினான்.
பேர் வாழ்வின் வாக்குத்தத்தமும்
அப்பாவி யடைந்தான்.

3 அவ்வாறே நானும் யேசுவால்
வேிமாசனம் பெற்றேன்
என் பாவத்திகில் நீங்கிற்றால்
ஓயாமல் பாடுவேன்.

4 இச்சீவன் நிலையற்றதே.
என் பாட்டும் அற்பமாம்.
என்றாலும் ராஜ்யம்சேரவே
சிரேஷ்ட கீதமாம்.

5 உம் திருரத்தம், ரட்சகா!
பாய்ந்தோடச் செய்யுமேன்.
பூலோக மெங்கும் நாயகா!
சுத்தாங்கம் பண்ணுமேன்.

---

103 S. & S. 392.

"Only trust Him."

1 நிர்ப்பந்தபாவி! யேசுவால்
விமோசன முண்டாம்,
மெய்வேத வாக்கை நம்பினால்,
மா பாரம் நீங்குமாம்.
நம்பி வந்தால், நம்பிவந்தால்
யேசுவண்டையில்,
ரக்ஷிப்பாரே! ரக்ஷிப்பாரே!
இந்த நேரத்தில்.

2 மாசற்ற ரத்தம் சிந்தலால்
பேர் வாழ்வுண்டாக்கினார்,
தூய்தான செந்நீர் ஸ்நானத்தால்
சுத்தாங்கம் பண்ணுவார்.

3 பேரின்ப ராஜ்யம் சேரவும்
மெய்வழி யேசுவே;
சமஸ்த நன்மை பெறவும்
கைமாறில்லாமலே.

4 சௌபாக்கிய கூட்டம் சேருவாய்,
பிரயாணம் செய்யவும்.
மெய்யான ஜீவன் அடைவாய்
அனந்த சந்தோஷமும்.

---

104 S. & S. 336.

"Come, sinner, come!"

1 யேசையர் தயைகூர,
வா! பாவி! வா!
மெய்பக்தர் ஜெபஞ்செய்ய.
வா! பாவி! வா!
இந்நேரம் கிட்டிச்சேர
வா! பாவி! வா!
இச்சணம் நெஞ்சந்தேற
வா! பாவி! வா!

2 மா பாரம் சுமந்தாலும்,
வா! பாவி! வா!
யேசாலே லகுவாகும்.
வா! பாவி! வா!
ஏற்பாரே நேசமாக!
வா! பாவி! வா!
சேர்ப்பாரே தயவாக!
வா! பாவி! வா!

3 அன்போடழைக்கிறாரே!
வா! பாவி! வா!
பேர் நன்மை கொடுப்பாரே!
வா! பாவி! வா!
சோராமல், ஆசையோடு
வா! பாவி! வா!
அஞ்சாது ற்சாகத்தோடு
வா! பாவி! வா!

---

105 S. & S. 874.

"Nothing, but the blood."

1 பாவதோஷம் நீக்கிட
மீட்பரின் ரத்தம் தானே,
தீயகுணம் மாற்றிட
மீட்பரின் ரத்தம் தானே.
மெய்யாம் ஜீவ நதி,
பாவம் போக்கும் நதி.
வேறே நதியை அறியேன்,
மீட்பரின் ரத்தம் தானே.

2 என்னைச் சுத்தமாக்கிட
மீட்பரின் ரத்தம் தானே,
மன்னிப்பை நான் பெற்றிட
மீட்பரின் ரத்தம் தானே.

3 வேறே ரக்ஷிப்பில்லையே,
மீட்பரின் ரத்தம் தானே,
புண்யகிரியை செல்லாதே,
மீட்பரின் ரத்தம் தானே.

4 ஜீவமார்க்கம் இதுவே,
மீட்பரின் ரத்தம் தானே,
ஏக சுத்த தீர்த்தமே,
மீட்பரின் ரத்தம் தானே.

106 S. & S. 379.c

"Are you washed in the blood of the Lamb."

1 பரிசுத்தம் பெற வந்திட்டீர்களா
ஒப்பில்லாத் திரு ஸ்நானத்தினால்?
பாவதோஷமற நம்பினீர்களா
ஆட்டுக்குட்டியின் ரத்தத்தினால்?
மாசில்லா—தூய்மையா?
சுத்த புண்ணிய தீர்த்தத்தினால்.
குற்றம் நீங்கிவிட குணம் மாறிற்று
ஆட்டுக்குட்டியின் ரத்தத்தினால்?

2 பரலோக சிந்தை அணிந்தீர்களா
வல்லமீட்பர் தயாளத்தினால்?
மறுஜன்மகுண மடைந்தீர்களா
ஆட்டுக்குட்டியின் ரத்தத்தினால்?

3 மணவாளன் வரக் களிப்பீர்களா
தூயநதியின் ஸ்நானத்தினால்?
ராஜரிடம் சேரச் சுகிப்பீர்களா
ஆட்டுக்குட்டியின் ரத்தத்தினால்?

4 மாசு கறை நீங்கும் நீசப்பாவியே!
சுத்த ரத்தத்தின் சக்தியினால்.
முக்திபேறுண்டாகும் குற்றவாளியே!
ஆட்டுக்குட்டியின் ரத்தத்தினால்.

---

107 S. & S. 396.

"Jesus is tenderly calling."

1 பாவி! உன் மீட்பர் கரிசனையாய்
அழைக்கிறார்! அழைக்கிறார்!
அலைந்து திரிந்து ஏன் கெடுவாய்?
யேசுவின் ரட்சிப்பைப் பார்
அழைக்கிறார்! அழைக்கிறார்!
விரும்பி வருந்தி உன்தனை அழைக்கிறார்.

2 இளைத்தும் தவித்தும் போனவனை
அழைக்கிறார்! அழைக்கிறார்!
நம்பிக்கையோடவர் சரணத்தை
சேருவாய். தள்ளமாட்டார்.

3 தாமதமின்றி இந்நேரத்தினில்,
வந்திடுவாய்! வந்திடுவாய்!
பாவமுமற உன் நெஞ்சத்தினில்
வாழ்வையும் பெற்றிடுவாய்.

4 விரும்பி வருந்தி அழைக்கிறார்.
ஓடியே வா! ஓடியே வா!
வந்திடுவோரைச் சந்தோஷிப்பிப்பார்
உடனே, உடனே வா!

---

108 S. & S. 424.

"Come unto me."

1 'என்னண்டை வா!' நல்மீட்பர் என்கிறார்.
அன்பின் சொரூபியாக நிற்கிறார்.
'தவித்துப்போன பாவீ! சோர்வதேன்?
என்னண்டை வா! நான் ஆறச்செய்குவேன்.
என்னண்டை வா!... என்னண்டை வா?
என்னண்டை வா! நான் ஆறச்செய்குவேன்.
ஆறச்செய்குவேன் ... ஆறச்செய்குவேன்.'

2 துன்பத்தினால் பாடுண்ட நெஞ்சமே!
உன்றன் விசாரம் நீக்க யேசுவே
நின்றென்கிறார் 'இப்பாடு நோவும் ஏன்?
என்னண்டை வா! நான் சாந்தமாக்குவேன்.'
என்னண்டை வா!... என்னண்டை வா!
என்னண்டை வா! நான் சாந்தமாக்குவேன்
சாந்தமாக்குவேன் ... சாந்தமாக்குவேன்.

3 'நிர்மூடபாவீ! சாவுக்கேதுவாய்
துர்க்கிரியை செய்து, திகில் அடைந்தாய்.
உன்பயம் நீங்கச் சீருமாக்குவேன்,
என்னண்டை வா! நான் ஜீவன் தருவேன்.'
என்னண்டை வா!... என்னண்டை வா!
என்னண்டை வா! நான் ஜீவன் தருவேன்.
ஜீவன் தருவேன் ... ஜீவன் தருவேன்.

4 ஆறுதல், சாந்தம், ஜீவன், மூன்றையும்
அப்பாலே அன்று, ஈண்டும் இப்பவும்

தயாளர் தந்து, ஏற்றகாலத்தில்
பேரின்பம் ஈவார் வான ராஜ்யத்தில்
என்னண்டைவா ... என்னண்டைவா !
என்னண்டைவா ! நான் ஆறச்செய்குவேன்.
சாந்தமாக்குவேன் ... ஜீவன் தருவேன்.

---

109 S. & S. 391.

"Christ receiveth sinful men."

1 கெட்டுப் போன மாந்தரை
யேசு ஏற்றுக்கொள்ளுவார்.
பாவ ஆத்துமாக்களை
குணமாக்கி ரட்சிப்பார்.
நல்ல செய்தி! கேளுமே!
யேசு ஏற்றுக்கொள்ளுவார்.
நம்பி வாரும்! வாருமேன்!
தள்ளிப்போடவே மாட்டார்!

2 "இளைப்பாறல் தருவேன்,
நம்பி வாரும்" என்கிறார்.
யாரானாலும், வாருமேன்!
பாவபாரம் நீக்குவார்.

3 மாசில்லாத ரத்தத்தால்
சர்வசுத்த மாக்குவார்.
வல்ல தூய ஆவியால்
தீய சுபாவம் மாற்றுவார்.

4 இந்த ஏற்ற நேரத்தில்
வந்து சேரக்கடவீர்.
புண்யநாதர் பாதத்தில்
மீட்பும் வாழ்வும் பெறுவீர்.

---

110 S. & S. 389.

"Whosoever will."

1 கேட்கும் யாரென்றாலும் சொல், சொல் செய்தி
திவ்ய சுவிசேஷம் யார்க்கும் அனுப்பு ;
எந்தத் தேசத்தார்க்கும் அதைப் பரப்பு,
ஆரென்றாலும் சேரலாம்.
யாவன் என்றாலும், யாவன் என்றாலும்,
என்னும் இந்தச் செய்தி எங்கும் கூறலாம் ;
பாவி வா, பிதா அன்பாய் அழைக்கவும்,
ஆரென்றாலும் சேரலாம்.

2 வாரும், யாரென்றாலும். தாமதிப்பதேன் ?
வா! திறந்தார் வாசல், உட்செல்லாததேன் ?
ஜீவ பாதை ஒன்றே யேசுதாம் வாவேன் ;
ஆர் என்றாலும் சேரலாம்.

3 வாக்கை யாரென்றாலும் பெற்றுக்கொள்ளலாம்,
ஆர் என்றாலும், இவ்வாக்கென்றும் நிற்குமாம் ;
ஆர் என்றாலும் நித்திய ஜீவன் காணலாம்,
ஆர் என்றாலும் சேரலாம்.

---

111 S. & S. 1165.

"Come! to the Saviour."

1 தாமதமின்றி யேசுவைச்சேர்,
வேதத்தில் காட்டின வழியே நேர்,
நம்மிடம் வந்தாரென்பதை தேர்,
வாவென்னுஞ் சொல் கேளும்.
சேர்வோம், பார்ப்போம் களிப்புடனே,
சுத்தஞ்செய்த நெஞ்சருடனே,
என்றென்றைக்கும் யேசுவுடனே
வாழ்வோம், சீர் அடைவோம்.

2 வாவென்கிறார், வேண்டாம் என்காதே,
பேரின்பானந்தம் நெகிழாதே,
பேரின்பானந்தம் நெகிழாதே'
யேசுவோடமர், ஆத்துமாவே;
போக்குச் சொல்லாமலும்.

3 இவ்விடம் வந்த யேசுவைப் பார்,
ரட்சிப்பின் காரணர் மார்பிலே சார்,
தயவாய் உன்னை வாவென்கிறார்,
தடை செய்யாதிரும்.

---

112 S. & S. 123.

"There is life for a look."

1 அறையப்பட்ட யேசு உன் மீட்பர் பாராய்;
ஜீவன் இச்சணமே அளிப்பார்.
ஓ! பார், பாவி, பார், நீ மீட்கப்படுவாய்
சிலுவை அறையுண்டவரால்.
பார், பார், ஜீவிப்பாய்,
சிலுவையில் கிறிஸ்துவைப் பார்த்து ஜீவிப்பாய்
உனக்கே ஜீவன் இச்சணமே.

2 அங்கேன் தொங்கினார் பாவஞ் சுமந்தோராய்?
மானிடர் குற்றந் தீர்க்கத்தானே;
பக்கத்தில் இரத்தம் பாய்ந்து வடிந்ததாறுய்,
பாவந் தீர்ந்தது சாவால்தானே.

3 செய்ய வேண்டியதெல்லாம் இதோ முடித்தார்
சந்தேகம் இனி அடைவதேன்?
முடிவாம் காலத்தில் ஓர்முறை வருவார்
ஆரம்பித்ததைப் பூரிக்கவே.

---

113 S. & S. 138.

"The precious blood."

1 விலையேறப்பெற்ற ரத்தமே,
சிலுவையில் கண்டேன்,
அதினால் என் மன்னிப்பாயிற்றே,
என்றெண்ணி நம்பினேன்.
ரத்தம்! திவ்விய ரத்தமே!
யேசு சிந்தினாரே.
சிலுவையில் பாடு பட்டோராய்
மாண்டாரே எனக்காய்.

2 லட்சாதி லட்சம் நன்மையே
தேவன்பினாலுண்டாம்.
எல்லாத்திலும சிறந்ததே
என் யேசு ரத்தமாம்.

3 திரளான பாவஞ்செய்த நான்
பிசாசின் அடிமை.
திரு ரத்தத்தால் என் யேசுதான்
மீட்டுக்கொண்டார் என்னை.

4 பெருவெள்ளம் போன்ற ரத்தமே
என் பாவம் நீங்கிற்று.
கருத்தாய்க் கண்டேனே நித்தமே
அதி உண்டாயிற்று.

5 சீயோன் உச்சியில் இப்பாட்டையே
என்றைக்கும் பாடுவோம்.
சந்நிதானத்தில் கெம்பீரமாய்
ரத்தத்தைப் போற்றுவோம்,

114 S. & S. 762.

"Return, Oh ! sinner."

1 தெய்வ கிருபையைத் தேடி,
பாவி, மனந் திரும்பு ;
மீட்பர் தரும் ஈவை நாடி
தூக்கம் விட்டெழுந்திரு.

2 வாசலானதோ இடுக்கம்,
தாழ்மையாகி உட்படு ;
ஜீவ வழியோ நெருக்கம்,
லோக நேசத்தை விடு.

3 மாம்சம், லோகம், ஆசாபாசம்,
பாவம் யாவும் அகற்றி
யேசுவில் மெய் விசுவாசம்
வைத்து உன்னை ஒப்புவி.

4 கர்த்தர் உன்னைத் தயவாக
ஏற்றுக்கொண்ட பிறகு
ஜெபத்தோடு விழிப்பாக
அவரில் நிலைத்திரு.

5 ஜீவனுள்ள நாள் மட்டாக
மோசங்கள் இருப்பினும்,
தேவ கரம் பெலமாக
உன்னைக் காத்து நடத்தும்.

---

115 S. & S. 365.

"Hark ! my soul, it is the Lord."

1 பாவி ! கேள் ! உன் ஆண்டவர்,
அறையுண்ட ரக்ஷகர்
கேட்கிறார், " நீ சொல், அப்பா !
என்னில் அன்புகூராயா ? "

2 "நீக்கினேன் உன் குற்றத்தை,
கட்டினேன் உன் காயத்தை,
தேடிப்பார்த்து ரக்ஷித்தேன்,
ஒளிவீசப் பண்ணினேன்."

3 "தாயின் மிக்கபாசமும்
ஆபத்தாலே குறையும்.
நீங்கமாட்டாதென்றுமே
ஒப்பில்லா என் நேசமே."

4 "என தன்பின் பெருக்கும்
ஆழம் நீளம் உயரமும்
சொல்லி முடியாது பார்!
என்னைப்போன்ற நேசனார்?"

5 "திவ்யரூபம் தரிப்பாய்
தேவராட்சியம் சேருவாய்
ஆதலால் நீ சொல், அப்பா!
என்னில் அன்பு கூரையா?"

6 "யேசுவே மா நீசன் நான்;
அன்பும் அற்ப சொற்பந்தான்
ஆயினும் பின்பற்றுவேன்.
அன்பின் சுவாலை ஏற்றுமேன்."

116

S. & S. 281.

"Come, for the feast is spread."

1 விருந்தைச் சேருமேன்,
அழைக்கிறார்;
ஆகாரம் பாருமேன்,
போஷிப்பிப்பார்;
தாகத்தைத் தீர்க்கவும்
யேசுவின் மார்பிலும்
சாய்ந்திளைப்பாறவும்
வா, பாவி, வா.

2 ஊற்றண்டை சேரவும்
ஜீவனுண்டாம்;
பாடும் விசாரமும்
நீங்கும் எல்லாம்:
நம்பி வந்தோர்க்கு
திர்ப்தி உண்டாயிற்று;
ஜீவாற்றின் அண்டைக்கு
வா, பாவி, வா.

3 மீட்பரின் பாதமும்
சேராவிடில்,
தோல்வியே நேரிடும்
போராட்டத்தில்;
யேசுவே வல்லவர்,
யேசுவே நல்லவர்,
யேசுவே ஆண்டவர்;
வா, பாவி, வா.

4 சத்யத்தின் பாதையில்
முன் செல்லுவாய்;
சிற்றின்ப வாழ்வினில்
ஏன் உழல்வாய்?
வாடாத க்ரீடமும்
ஆநந்தக் களிப்பும்
பேர் வாழ்வும் பெறவும்
வா, பாவி வா.

5 சேருவேன், யேசுவே,
ஏற்றுக்கொள்வீர்;
பாவமும் அறவே
சுத்தம் செய்வீர்;
அப்பாலே ராஜ்யத்தில்
ஆநந்தக் கடலில்
மூழ்கிப் பேரின்பத்தில்
கெம்பீரிப்பேன்.

117 H. A. & M. 46.

"Listen to His voice."

1 கேட்டோரே தேவன் சொல்வதை
அல்லத்தட்டாமல் அவனை
இப்பொழுதே தேடிக்கொள்ளுமேன்,
பேரன்பை நம்பி வாருமேன்.

2 இப்போது மனஸ்தாபமாய்
திரும்பி வந்தால், தயவாய்
பிதா அணைத்துக்கொள்ளுவார்,
குமாரன் மூலம் மன்னிப்பார்.

3 தேவாவி உங்கள் மனதை
இளக்கி, மீட்பர் ரத்தத்தை
கொண்டே சுத்தாங்கம் செய்குவார்,
நிறைவாய் ஆசீர்வதிப்பார்.

---

118 S. & S. 401.

"Art thou weary, art thou languid?"

1 "துக்க பாரத்தால் இளைத்து
நொந்துபோனாயோ?
யேசு உன்னைத் தேற்றிக்கொள்வார்,
வாறாயோ?"

2 "அன்பின் ரூபகாரமாக
என்ன காண்பித்தார்?"
"அவர் பாதம் கை விலாவில்
காயம் பார்."

3 "அவர் சிரசதின் கிரீடம்
செய்ததெதினால்?"
"ரத்தினம் பொன்னாலுமல்ல,
முள்ளினால்."

4 "கண்டுபிடித்தண்டினாலும்
துன்பம் வருமே,"
"துக்கம், கஷ்டம் கண்ணீர் யாவும்
இம்மையே."

5 "அவரைப் பின்பற்றினோர்க்கு
துன்பம் மாறுமோ?"
"சாவின் கூரும் மாறிப்போகும்,
போதாதோ?"

6 "பாவியேனை ஏற்றுக்கொள்ள
மாட்டேன் என்பாரோ!"
"விண், மண் ஒழிந்தாலும் உன்னை
தள்ளாரே."

7 "போரில் வெற்றி சிறந்தோர்க்கு
கதியா ஈவார்?"
"தூதர், தீர்க்கர், தூதர் யாரும்
ஆம், என்பார்."

---

119 S. & S. 416.

"From the Cross uplifted high."

1 சிலுவை மரத்திலே
யேசுவை நான் நோக்கவே
என்னைப் பார்த்தழைக்கிறார்,
காயங் காட்டிச் சொல்கின்றார்:
"மீட்பின் செய்கை ஆயிற்றே,
வாழ வாவேன், பாவியே."

2 "பாவப் பலியானதால்
குத்தப்பட்டேன் ஈட்டியால்;
ரத்தம் பூசப்பட்டு நீ,

எனக்குன்னை ஒப்புவி ;
மீட்பின் செய்கை ஆயிற்றே.
வாழ வாவேன் , பாவியே."

3 "பான போசனம் நானே,
விருந்துண்டு வாழ்வாயே ;
பிதாவண்டை சேரலாம்,
நேசப் பிள்ளை ஆகலாம் ;
மீட்பின் செய்கை ஆயிற்றே,
வாழ வாவேன் பாவியே."

4 "சீக்கிரத்தில் வருவேன்,
உன்னைச் சேர்த்து வாழ்விப்பேன்
நித்யாநந்தம் ராஜ்யத்தில்
உண்டு, வா என்னண்டையில் ;
மீட்பின் செய்கை ஆயிற்றே,
வாழ வாவேன், பாவியே."

———

120 S. & S. 216.

"I heard the voice of Jesus say."

1 "வா ! பாவி ! இளைப்பாற வா !
என் திவ்விய மார்பிலே
நீ சுகமாகச் சாய்ந்திரு"
என்றார், கிறிஸ்தேசுவே.
இளைத்துப்போன நீசனாய்
வந்தாறித் தேறினேன்.
என் பாரம் நீங்கி, யேசுவால்
சந்தோஷமாயினேன்.

2 "வா ! பாவி ! தாகந்தீர்க்க வா !
மெய்ப்பானம் இதுவே.
நான் ஜீவத்தண்ணீர் தருவேன்"
என்றார்' நல் மீட்பரே.

அவ்வாறு ஜீவ ஊற்றிலே
நான் பானம்பண்ணினேன்.
என் தாகந்தீரப் பெலனும்
பேர்வாழ்வும் அடைந்தேன்.
3 "'வா ! பாவி ! இருள்நீங்க வா !
என் ஒளி வீசுதே.
பிரகாசிப்பித்து ரக்ஷிப்பேன்."
என்றார்' மா நேசரே.
மெய்ஞ்ஞான அருணோதயம்
அத்தால் கண்டடைந்தேன்.
என்றைக்கும் சுகஜீவியாய்
நான் வாழ்ந்துகொள்ளுவேன்.

---

121 S. & S. 389.

"Whosoever heareth,"

1 கேட்கும் யாரென்றாலும், சொல், சொல் செய்தி ;
திவ்விய சுவிசேஷம் யார்க்கும் அனுப்பு;
எந்த தேசத்தார்க்கும் அதைப் பரப்பு
யாரென்றாலும் வரலாம்.
யாவன் என்றாலும், யாவன் என்றாலும்,
என்றும் இந்த செய்தி எங்கும் கூறலாம் ;
பாவி, வா ! பிதா அன்பாய் அழைக்கிறார் ;
யாரென்றாலும் சேரலாம்.
2 வாரும், யாரென்றாலும் தாமதிப்பதேன் ?
வா, திறந்தார் வாசல் உட்செல்லாததேன் ?
ஜீவபாதை ஒன்றே, யேசுதான், வாறேன் ;
யாரென்றாலும் சேரலாம்.
3 வாக்கை யாரென்றாலும் பெற்றுக்கொள்ளலாம்
யாரென்றாலும், இவ்வாக்கென்றும் நிற்குமாம் :
யாரென்றாலும் நித்தியஜீவன் காணலாம் ;
யாரென்றாலும் சேரலாம்.

---

122 G. B. 235.

"Who will be next?"

1 மீட்பரைப் பின்செல்ல யார் வருவீர்?
துன்பமிருந்தாலும் யார் வருவீர்?
நம்புவேன், அவரோ வரப் போகிறார்;
சமாதானம் பெற, யார் வருவீர்?
யார் வருவீர்? யார் வருவீர்?
மீட்பரின் பின் செல்ல யார் வருவீர்?

2 மீட்பரின் பின் செல்ல யார் வருவீர்?
அவர் திருப்பாதம் சேர்ந்திடுவீர்;
பாவம் எல்லாம் அவர் நீக்கிவிடுவார்;
ஜீவநதியண்டை யார் வருவீர்?

3 மீட்பரைப் பின்செல்ல யார் வருவீர்?
மனம் மாறி நற்கிரியை செய்ய,
ரட்சண்ய பாடலை யார் பாடுவீர்?
ரட்சண்ய மூர்த்தியை துதிசெய்ய.

---

123 S. & S. 386 old.

"Have you any room for Jesus?"

1 பாவிகளே! நேச மீட்பர்
"ஏற்றுக்கொள்வேன்" என்கிறார்;
மீட்பர் உன்னை—ஏற்றுக்கொள்வார்;
"என்னண்டை வா!" என்கிறார்
மீட்பர் உன்னை—இப்போ நம்பு;
உன்னை மீட்க மரித்தார்;
அழைப்புக்குக் கீழ்ப்படிந்து
பாவிகளே! வாருங்கள்.

2 மீட்பரண்டை வந்தால் உன்னை
நேசமாக ஏற்பாரே;
நம்பிக்கையாய்த் தந்தால் உன்னைக்
கைவிடாமல் காப்பாரே.

3 அழைப்புக்குச் செவிகொடு ;
கிருபையின் நாளிதே ;
ஜீவநதி பாய்ந்தோடுவது
மீட்பர் காயத்திருந்தே.

---

124 S. & S. 77

"What means this eager anxious throng."

1 ஆசை ஆவற்றிரள் யாவர் ?
என் இவ்வூக்கம் காட்டிச் செல்வார் ?
நாளும் கூடல் மா ஆச்சர்யம் ;
ஆரவாரம் ஏது சொல்லும் ?
சனம் மெல்ல மாறு சொல்வார் ;
நசரேத் ஏசுவே வந்திட்டார்.

2 ஆர் இந்த யேசு ? என் அவர்
இவ்விதம் நகர் அசைப்பார் ?
ஜனம் ஆட்ட சக்தி இஷ்டம்
உண்டோ வழிப்போக்கன் வசம் ?
ஜனம் மெல்ல மாறு சொல்வார் ;
நசரேத் ஏசுவே வந்திட்டார்.

3 வா ! பாரஞ் சுமந்தவனே,
மன்னிப்பாற்றித் தேற்றம் வீடே
தந்தையை விட்டோடின நீ
மீளு, தயை அங்கிகரி ;
சோதனையில் தஞ்சமாவார் ;
நசரேத் ஏசுவே வந்திட்டார்.

4 வரமாட்டேன் என்பாயானால்
திவ்விய அந்நேசம் தள்ளினால்
உன்னை அவர் அகற்றுவார் ;
உன் துக்கஜெபத்தை கேளார் ;
ஐயோ ; போனார், ஐயோ ; போனார் ;
நசரேத் ஏசுவே போய்விட்டார்.

---

125 S. & S. 390.

" Sinners! Jesus will receive."

1 பாவி! ஏசுன்னை ஏற்பார்;
இதையே எல்லார்க்கும் சொல்;
வீழ்வார், சோர்வார், அகல்வார்;
யாருக்கும் இதை நீ சொல்.
உரப்பாய் நீயும் பாடு;
ஏற்பாரே பாவிகளை;
தெளிவாய் கூறு, யேசு
ஏற்பாரே பாவிகளை.

2 வா உனக்கீவார் ராஜ்யம்
அவர் வாக்கை நம்பவே
பாவிக்கீவார் கடாட்சம்;
ஏற்பாரே பாவிகளை.

3 என் மன வாதை நீங்கி
அவரில் நிலைக்கிறேன்;
என் கறை நீக்கி தாங்கி
மீட்டார், அவரைச் சேர்வேன்.

4 ஏற்பாரே பாவிகளை
என்னையும் அவர் ஏற்பார்;
தம்மால் சுத்தரானோரை
தம்மோடு நித்யம் சேர்ப்பார்.

---

126 S. & S. 698.

" Yield not to temptation."

1 தீவினை செய்யாதே மாசோதனையில்,
பொல்லாங்கனை வென்று போராட்டத்தினில்;
வீண் ஆசையை முற்றும் கீழடக்குவாய்,
யேசையனை நம்பி வென்றேகிப் போவாய்.
ஆற்றித் தேற்றியே காப்பார்,
நித்தம் உதவி செய்வார்!
மீட்பர் பெலனை ஈவார்,
ஜெயம் தந்திடுவார்.

2 வீண்வார்த்தை பேசாமல், வீண் தோழரையும்,
சேராமலே நீக்கி நல்வழியிலும்;
நின்றூக்கமும் அன்பும் சற்றேனும் விடாய்!
யேசையரை நம்பி வென்றேகிப் போவாய்

3 வென்றேகின வீரன் பொற் கிரீடத்தையும்,
பேர் வாழ்வையும் பெறுவான் நித்தியமும்;
மா நேசரின் பெலன் சார்ந்தே செல்லுவாய்,
யேசையரை நம்பி வென்றேகிப் போவாய்,

---

127 S. & S. 426.

"Oh! turn ye, Oh! turn ye."

1 திரும்பு, திரும்பு, ஏன் சாகவேண்டும்?
கர்த்தர் இரக்கத்தாற் சமீபிக்கிறார்;
"வா" என்கிறார்; யேசுவும்,சுத்தாவியும்;
ரட்சிப்பை கொடுக்க காத்து நிற்கிறார்.

2 உனது இதயம் சீர் அடையுமா?
நீ காலதாமதஞ் செய்து நிற்பதால்;
நிர்ப்பந்தமான பாவியாயினும் வா,
ரட்சண்ய ஊற்று இங்கே ஒடுவதால்.

3 பசியால் வருந்தி நிற்பதேதுக்கு?
யேசுவின் அன்புதான் உனக்குத் தேவை;
நீ இன்னம் சந்தேகிப்பது ஏதுக்கு?
ஆராய்ந்துபார் மட்டற்ற கிருபையை.

---

128 S. & S. 289

"Leave, oh, leave your sins."

1 பாவிகளே! நீங்களிப்போ
இரட்சண்ய விருந்துக்கு
வரத் தடை செய்வீர்களோ?
இன்னும் தாமதமுண்டோ?

2 எல்லாம் ஆயத்தம் உனது
இரட்சகரிடத்தில் வா;
இப்போதே நீ மன்னிப்படை
உலகத்தை விட்டு வா.

3 உலகத்தின் இன்பம் என்ன !
நாவாற் சொல்லக் கூடாதோ ?
உலகப் பொருட்கள் என்ன !
மனத்திருப்தி தந்ததோ ?

---

129 S. & S. 161.

"Hark the Gospel news."

1 இரட்சணிய செய்தி கேளும்
பாவத்தில் அலைவோரே !
அன்பின் வெள்ளம் ஓடப் பாரும்
பாவிகளுக்காகவே ;
பாவிகளே !
மீட்பரண்டை வாருங்கள்.

2 புகலிடம் கண்டடைய
இன்றே வகை பாருங்கள் ;
ஜீவ ஊற்றில் பாவி மூழ்க
நேசழைப்பைக் கேளுங்கள் ;
தாமதியாமல்
மீட்படைய இப்போ வா.

3 ஆற்றைப்போற் க்ருபை ஓடுது
மீட்படைந்தார் லட்சம் பேர் ;
வற்றுமல் இன்னம் ஓடுது
மீட்பர் காயத்திருந்தே ;
ரட்சிப்படை,
பாவம் விடு இப்போதே.

Sinner—Repentance and Acceptance.

பாவியின் மனந்திரும்புதலும் ஏற்றுக்கொள்ளுதலும்.

130 S. & S. 473.

"Just as I am."

1 நான் பாவிதான், ஆனாலும் நீர்
மாசற்ற ரத்தம் சிந்தினீர் ;
வா, என்று என்னைக் கூப்பிட்டீர் ;
என் மீட்பரே, வாறேன்.

2 நான் பாவிதான், என் நெஞ்சிலே
கறை பிடித்திருக்குதே ;
என் கறை நீங்க இப்போதே,
என் மீட்பரே, வாறேன்.

3 நான் பாவிதான், பயத்தினால்
அலைந்து, பாவ பாரத்தால்
அமிழ்ந்து மாண்டு போவதால்,
என் மீட்பரே, வாறேன்.

4 நான் பாவிதான், இரங்குவீர்
அணைத்து, காத்து, ரட்சிப்பீர்,
அருளாம் செல்வம் அளிப்பீர் ;
என் மீட்பரே, வாறேன்.

5 நான் பாவிதான் அன்பாக நீர்
நீங்காத் தடைகள் நீக்கினீர்,
உமக்குச் சொந்தம் ஆக்கினீர் ;
என் மீட்பரே, வாறேன்.

131 S. & S. 1061.

"Be merciful to sinners."

1 நிர்ப்பந்தமான பாவியாய்
நான் இங்கே தேவரீருக்கே
முன்பாக மா கலக்கமாய்
நடுங்கி வந்தேன், கர்த்தரே ;
இரங்குமேன், இரங்குமேன்,
என்றும்மைக் கெஞ்சிக் கேட்கிறேன்.

2 ஆ ! என் குரூர பாவத்தால்
மிகுந்த துக்கம் அடைந்தேன் ;
ஆ ஸ்வாமி, துயரத்தினால்
நிறைந்த ஏழை அடியேன்,
இரங்குமேன், இரங்குமேன்,
என்றும்மைக் கெஞ்சிக் கேட்கிறேன்.

3 என் குற்றத்துக்கு தக்கதாய்
செய்யாமல் தயவாய் இரும் ;
பிதாவே என்னைப் பிள்ளையாய்
இரங்கி நோக்கி அருளும் ;
இரங்குமேன், இரங்குமேன்,
என்றும்மைக் கெஞ்சிக் கேட்கிறேன்

4 என் நெஞ்சின் திகில் தணித்து,
என்மேல் இரங்கி ரட்சியும் ;
திவ்விய சந்தோஷம் அளித்து,
எப்போதும் கூடவே இரும் ;
இரங்குமேன், இரங்குமேன்,
என்றும்மைக் கெஞ்சிக் கேட்கிறேன்.

---

132 S. & S. 663.

"I was a wanderer."

1 மிகுந்த பாவச் சேற்றிலே
அமிழ்ந்தவன் ஆனேன் ;

விஸ்தாரபூதலத்திலே
சகாயத்தைக் காணேன்.

2 மா தூரமாய் எத்திக்கிலும்
போனாலும், இன்னுமே
என் தோஷம் ஆராலாகிலும்
நீங்காமல் நிற்குமே.

3 தள்ளுண்ணவே நான் பாத்திரன்,
கெட்டேன் என் பாவத்தால்;
நீரோ மகா தயாபரன்,
நிறைந்தோர் அன்பினால்.

4 ஆ யேசுவே, என் இக்கட்டில்
சகாயராய் இரும்;
தெய்வீக அன்பை நெஞ்சத்தில்
அளித்து ரட்சியும்.

---

133 S. & S. 486.

"Depth of mercy."

1 தேவனே, நான் எத்தனை
பாவ பாதகங்களை
செய்து வந்தேன் என்பதை
உணர்த்தும் என் கர்த்தரே.

2 ஐயோ! நான் மா பாவத்தால்
கெட்டுப்போய் இருக்கையால்,
என் ஜும் வாடி நோகிறேன்;
துக்கத்தால் கலங்கிறேன்.

3 நெஞ்சு என்னை குத்தவே
துன்பம் துயர் மிஞ்சவே
ஆவியும் கலங்கிற்று;
கண்ணீர் பாய்ச்சலாயிற்று.

4 வெட்கம் கொண்ட அடியேன்
துக்கமுள்ளோனாய் வந்தேன்;
சுவாமி என்னை மிகவும்
தேற்றி மன்னித்தருளும்.

---

134 A. H. 884.

"Unto Thee I cry, O! Lord."

1 தாழ்விலிருந்து கூப்பிடும்
என் சத்தம் கேட்டன்பாக
நான் செய்கிற மன்றாட்டுக்கும்
செவி கொடுப்பீராக;
கர்த்தாவே, நரர் பாவத்தை
நீர் மன்னியாமல், நீதியை
பார்த்தால், ஆர் நிற்கக் கூடும்?

2 மன்னிப்பை மாந்தன் எவனும்
தன் புண்ணியங்களாலே
அடையான்; உம்மைப் பாவியும்
தாழ்வான மனதாலே
தேடி, நம்பிக்கையுடனே
வந்தால், மா தயவாகவே
மன்னிக்கிறீர், கர்த்தாவே.

3 என் மீட்பர்பேரில் சாருவேன்
என் புண்ணியம் அபத்தம்;
தேவன்பையே நான் நம்புவேன்,
அதற்கு வாக்குத்தத்தம்
மெய்யான தேவ வார்த்தையில்
உண்டென்பதே என் மனதில்
நன்றாய்ப் பதிப்பீராக.

---

135 S. & S. 599.

"Show me Thy way."

1 ஆ! உமது மா தயையால்
என் மேல் இரங்கும், கர்த்தரே ;
என் பாவ பாதகங்களால்
மனம் கலங்குகின்றதே.

2 நான் செய்த பாவம் உமக்கே
விரோதம் என்றழுகிறேன் ;
நீர் தண்டித்தல் நியாயமே,
என்றாலும் மன்னிப்பீயுமேன்.

3 நான் ஜென்மத்தால் அடைந்த சீர்
எல்லாம் பொல்லாங்கும் பாவமும் ;
நல் உண்மையை விரும்பும் நீர்
சுத்தாங்கத்தைத் தந்தருளும்.

4 என் பாவ குஷ்டரோகத்தை
அகற்றி, என்னைக் கழுவும் ;
நொறுக்கப்பட்ட ஆவியை
திரும்பவும் உயிர்ப்பியும்.

---

136 S. & S. 221.

"Make known Thy mercy."

1 ஆ ! இவ்வேழைக்கு இரங்கும்,
ஆத்ம பரிகாரியே,
என்னைப் பாரும், என்னில் எங்கும்
நோவும் ரோகமும் உண்டே ;
பாவ குஷ்டம் முற்றும் நீங்க
கையை நீட்டித் தொடுமேன் ;
சருவாங்க சொஸ்தமாக
நீர் கடாட்சம் செய்யுமேன்.

2 உம்முடைய வஸ்திரத்தின்
ஓரம் தொடவே வந்தேன்;
சொஸ்தம் ஈயும் தேவரீரின்
சத்துவத்தை நம்பினேன்;
அச்சம் நீக்கும் திவ்ய வாக்கை
அன்பால் பொங்கிச் சொன்னீரே;
ஆ கர்த்தாவே, நல்ல சீரை
அனுக்ரகம் செய்யுமே.

3 ஏழைப் பாவி செய்த ஜெபம்
கேட்டுப் பாவம் போக்கினீர்;
சுத்தமாக்கி உம் சமீபம்
என்னைச் சேர்த்து அணைத்தீர்,
அதால் பயபக்தியாக
ஸ்தோத்திரஞ் செலுத்துவேன்;
உம்மையே புகழ்ச்சியாக
வாழ்த்தல் சொல்லி ஏத்துவேன்.

---

137 S. & S. 1164.

"Saviour, like a shepherd lead us."

1 ரட்சாபெருமானே! பாரும்!
புண்யபாதம் அண்டினோம்.
சுத்தமாக்கிச் சீரைத் தாரும்.
தேடிவந்து நிற்கிறோம்.
யேசுநாதா! யேசுநாதா!
உந்தன் சொந்தமாயினோம்.
யேசுநாதா! யேசுநாதா!
உந்தன் சொந்தமாயினோம்.

௨ மேய்ப்பன் போல முந்திச் சென்றும்
பாதுகாத்தும் இருப்பீர்.
ஜீவத்தண்ணீரண்டை என்றும்
இளைப்பாறச் செய்கிறீர்.
யேசுநாதா! யேசுநாதா!
நித்தம் போஷிப்பிக்கிறீர்.
யேசுநாதா! யேசுநாதா!
நித்தம் போஷிப்பிக்கிறீர்.

௩ நீதிபாதை தவறாமல்,
சுகமாகக் காக்கிறீர்,
மோசம் பயமுமில்லாமல்
தங்கச்செய்து தாங்குவீர்.
யேசுநாதா! யேசுநாதா!
ஒருபோதும் கைவிடீர்.
யேசுநாதா! யேசுநாதா!
ஒருபோதும் கைவிடீர்.

௪ ஜீவகால பரியந்தம்
மேய்த்துக் காத்தும் வருவீர்.
பின்பு திவ்ய பேரானந்தம்
தந்து வாழச் செய்குவீர்.
யேசுநாதா! யேசுநாதா!
ஊழிகாலம் வாழ்விப்பீர்.
யேசுநாதா! யேசுநாதா!
ஊழிகாலம் வாழ்விப்பீர்.

138 S. & S. 457.

"Now begin the heavenly theme."

1 மீட்கப்பட்ட கூட்டமே,
உங்கள் மீட்பர் பேரிலே
பாடி, வாழ்த்தல் செய்யுங்கள்,
மீட்பின் அன்பைச் சொல்லுங்கள்.

2 தேவனும் பிதா தயை
யேசுவால் உண்டானதை
பார்த்து, போற்றிப் பாடுங்கள்,
மீட்பையே உயர்த்துங்கள்.

3 நீடு காலம் உங்களை
கேடு செய்த ஆசையை
தள்ளுதற்கு மைந்தனார்
மீட்பையே உண்டாக்கினார்.

4 ஆதலால் மகிழ்வோடே
போற்றிப் பாட, மாந்தரே,
தூதரோடுங் கூடுங்கள்,
மீட்பையே உயர்த்துங்கள்.

---

139 S. & S. 351.

"Why do you wait, dear brother?"

1. பாவம் தீராததென்ன
ஓ! தாமசம் பண்ணுவானேன்?
தயாபரர் நித்திய ஜீவன்
ஈவாரே, சந்தேகிப்பானேன்?
வாவேன்! வாவேன்!
வாவேன் இச்சணமே!

2 உணர்வில்லாததென்ன?
பயங்கர மோசமுண்டாம்.

இயேசுவினாலே யல்லாமல்
விமோசனமே இல்லையாம்.

3 சுத்தமில்லாத தென்ன ?
மா திவ்விய ஸ்நானமுண்டே !
உன் பாவம் நிவாரணமாகும்
சமூலம்—இக்கேரத்திலே.

4 குணப்படாத தென்ன ?
ரக்ஷணிய நாளிதுவே !
ராக்காலம் சமீபித்துவர
மாமோசமும் நாசமுமே.

---

140 S. & S. 476.

"Take me as I am."

1 தயாபரா! கண்ணோக்குமேன் !
உம்மாலேயன்றி சாகுவேன்.
என் சீரில்லாமை பாருமேன் !
என் பாவம் நீக்கையா !
என் பாவம் நீக்கையா !
என் பாவிம் நீக்கையா !
உம் ரத்தமே என் கதியே !
என் பாவம் நீக்கையா !

2 என் பாவஸ்திதி அறிவீர்,
மாசற்ற ரத்தம் சிந்தினீர்,
அசுத்தம் யாவும் அழிப்பீர்,
என் பாவம் நீக்கையா !

3 மெய்பக்தி ஒன்றுமில்லையே !
நற்கிரியை வீண்பிரயாசையே
உம் ரத்தத்தின் நிமித்தமே
என் பாவம் நீக்கையா !

4 இதோ! நற்பாதமண்டினேன்.
தள்ளாமல் சேர்த்துக்கொள்ளுமேன்!
என்றைக்கும் பாதுகாருமேன்.
என் பாவம் நீக்கையா!

---

141 S. & S. 481.

"Lone and weary, sad and dreary."

1 சீர் பெருமன் — திக்கில்லாமல்,
யேசுவண்டை சேருவேன்.
ஆவலோடும் ஆசையோடும்
திருப்பாதம் அண்டுவேன்.
அண்டினேனே! — அண்டினேனே!
ஆசீர்வாதம் தாருமேன்.
அண்டினேனே! — அண்டினேனே!
ஆற்றித் தேற்றிக் காருமேன்.

2 தயவாக — நேசமாக
சேர்த்தந்து ரக்ஷிப்பீர்.
பாவத்திற்குப் பாரிக்கும்.
சர்வ சுத்தியாக்குவீர்.

3 குணம் மாற — நெஞ்சம் ஆற
பரவசமாகுவேன்.
வரும் லோக வாழ்வை சேர
ஊழி காலம் வாழுவேன்.

4 அருள் தாரும் — பாதுகாரும்
மறு மாசில்லாமலே
வாழ்விலேயும் தாழ்விலேயும்
தாங்கியாளும் நாயனே!

Salvation.

இரட்சிப்பு.

142 S. & S. 147.

"Salvation is free"

1 ரட்சிப்பு சுத்த தயவால்
உண்டான தேவ தத்தம்;
அது நாம் செய்த தர்மத்தால்
கிடைப்பது அபத்தம்;
பூலோகத்தின் கடன்களை
செலுத்தித் தீர்த்த யேசுவை
அண்ணாந்து பார்க்க வேண்டும்.

2 தெய்வீக கற்பனைகளை
நாம் கைக்கொள்ளாமல் விட்டு,
துர் ஸ்பாவத்தாலே பாவத்தை
எப்போதும் நடப்பித்து,
கர்த்தாவைக் கோபமூட்டினோம்,
நிர்ப்பந்தத்தைச் சம்பாதித்தோம்,
சீர் கேடு பெருகிற்று.

3 இப்போதோ யேசு க்றிஸ்துவால்
நாம் நீதிமான்களாயும்,
தேவாவியின் நற் க்ரியையால்
ஜென்மிக்கப்பட்டோராயும்
மெய்த் தொண்டராயும் நடப்போம்,
கர்த்தாவின் அன்பைக் கூறுவோம்,
எந்நாளும் துதி செய்வோம்.

143 S. & S. 129.

"There is a fountain."

1 பூலோகத்தாரெல் லோருக்கும்
ஓர் ஜீவ ஊற்றுண்டே.
எப்பாவ தோஷ குற்றமும்
நிர்மூல மாகுமே.

2. மா பாவியான கள்ளனும்
அவ்வூற்றில் மூழ்கினான்.
பேர் வாழ்வின் வாக்குத்தத்தமும்
அப்பாவி யடைந்தான்.

3 அவ்வாறே நானும் யேசுவால்
விமோசனம் பெற்றேன்.
என் பாவத்திகில் நீங்கிற்றால்
ஓயாமல் பாடுவேன்.

4 இச்சீவன் நிலையற்றதே.
என் பாட்டும் அற்பமாம்.
என்றாலும் ராஜ்யம் சேரவே
சிரேஷ்ட கீதமாம்.

5 உம் திரு ரத்தம், ரக்ஷகா!
பாய்ந்தோடச் செய்யுமேன்.
பூலோகமெங்கும் நாயகா!
சுத்தாங்கம் பண்ணுமேன்.

---

144 S. & S. 16.

"Redemption, Oh! wonderful story."

1 ரட்சண்யம் ஆச்சர்ய சரிதை!
நம்மெல்லோருக்கும் நற்செய்தி;
தீர்த்தார் இயேசு நம் கடனை
மரத்தில் ரத்தத்தை சிந்தி.

நம்புவாய், ஓ பாவி! நம்புவாய்,
நற்செய்தி ஏற்றுகொள், உண்மை;
மரத்திலே மாண்டோரை நம்பு;
ஈகிறார் உனக்கு ரட்சை.

2 சாவினின்று ஜீவனில் கொண்டு,
வந்து தம் பிள்ளையாக்கினார்;
திறந்திருக்கும் ஓர் ஊற்றுண்டு;
அதில் சுத்தம் அடையப்பார்.

3 பூமியில் பாவ சோதனைகள்
வருகினும் மேற்கொள்ளாதே;
கிறிஸ்து தம் மீட்பினால் பாவத்தின்
வலு அழித்தார் முற்றுமே.

4 தேவ கிருபை ஈவை வாங்கிக்கொள்;
ஏசுவிடம் ஓடு இன்றே;
வருபவனை ஏற்றுக்கொள்வார்;
ஒருபோதும் தள்ளிடாரே.

---

145 S. & S. 68.

"Shall we gather at the river."

1 ஜீவ நதியண்டை போவோம்.
சிங்காசனத் தூறுமே;
தேவதூதர் நிற்பர், சேர்வோம்
திரு நதி ஓரமே.
ஜீவ நதியண்டை சேர்வோம்;
நேர்த்தியாமே, திவ்ய நேர்த்தியாமே,
பாவ மற்ற வானோரைக் காண்போம்,
தேவ சன்னிதியிலே.

2 அந்த நதியின் அலைகள்
மோதி வீசுங் கரையில் ;
எந்நாளும் உலாவி நாங்கள் ;
பணிவோம் சந்தோஷத்தில்.

3 காந்தியான நதி சேர்வோர்,
கஷ்டம் யாவும் நீக்குவார்,
ஆண்டவர் கிருபையுற்றோர்,
முடி அங்கி பெறுவார்.

4 ரட்சகரின் சாயல் பார்ப்போம்.
ஜீவ நதி நீரினில்
கீதம் பாடுவதைக் கேட்போம்
களிப்போம் நம் ரட்சிப்பில்.

---

146 S. & S. 1079.

"Jesus saves."

1 நல்லசெய்தி! யேசுவை
நோக்கிப்பார்! ரட்சிப்பார்!
நம்பிவந்து, அவரை
நோக்கிப்பார்! ரட்சிப்பார்!
எந்தப் பாவியாயினும்
தள்ளமாட்டேன் என்கிறார்.
துரோகம் செய்தபோதிலும்
நோக்கிப்பார்! ரட்சிப்பார்!

2 எங்கும் செய்தி சொல்லுவோம்.
நோக்கிப்பார்! ரட்சிப்பார்!

தேசா தேசம் கூறுவோம்,
நோக்கிப்பார் ! ரட்சிப்பார் !
எந்த நாடு தீவிலும்
யேசு காத்து நிற்கிறார்;
மூடன் நீசன் ஆகிலும்
நோக்கிப்பார் ! ரட்சிப்பார் !

3 இன்னும் கேள் ! மாநேசராம்
யேசுவே காக்கிறார்.
நம்பும் பக்தரை யெல்லாம்
காக்கிறார் ! காக்கிறார்.
சற்றும் தவறுமலும்
கையில் ஏந்திக்கொள்ளுவார்.
கேடு பாடில்லாமலும்
காக்கிறார் ! காக்கிறார் !

4 சுவிசேஷம் இதுவே!
காக்கிறார் ! காக்கிறார் !
பாவம் நீக்கி, பின்னுமே
காக்கிறார் ! காக்கிறார் !
ராட்சியம் சேருமளவும்
தாங்கிக் கொண்டே இருப்பார்.
தீமையைச் செய்யாமலும்
காக்கிறார் ! காக்கிறார் !

---

147 S. & S. 230.

"Blow, ye the trumpet blow."

1 கர்த்தாவின் தாசரே,
எக்காளம் ஊதுங்கள்,

சந்தோஷ செய்தியை
எங்கெங்கும் கூறுங்கள் ;
சிறைப்பட்டோரின் மீட்புக்கு
யூபிலி ஆண்டு வந்தது.

2 எல்லார் முன்பாகவும்
யேசுவை உயர்த்துங்கள்,
அவரே யாவர்க்கும்
ரட்சகர் என்னுங்கள்;
சிறைப்பட்டோரின் மீட்புக்கு
யூபிலி ஆண்டு வந்தது.

3 ஜீவனை பாவத்தால்
இழந்த மாந்தரே,
க்றிஸ்துவின் நீதியால்
ஜீவன் கிடைக்குமே ;
சிறைப்பட்டோரின் மீட்புக்கு
யூபிலி ஆண்டு வந்தது.

4 பாவம் பிசாசுக்கும்
சிறைப்பட்டோர்களே,
உங்களை ரட்சிக்கும்
மீட்பர் நல் யேசுவே ;
சிறைப்பட்டோரின் மீட்புக்கு
யூபிலி ஆண்டுவந்தது.

5 சந்தோஷ செய்தியை
எல்லாரும் கேளுங்கள்,
அன்போடு யேசுவை
இப்போதே சேருங்கள்;
சிறைப்பட்டோரின் மீட்புக்கு
யூபிலி ஆண்டு வந்தது.

Experience—Prayer.

ஜெபம்

148 S. & S. 309.

"Revive Thy works, O! Lord."

1 கர்த்தாவே! இறங்கும்!
ப்ரசன்னமாகுமேன்.
மெய்பக்தர் நெஞ்சில் இப்பவும்
வந்தனல் மூட்டுமேன்.
கர்த்தாவே! இறங்கும்!
நற்சீரைத் தாருமேன்.
மா வல்ல கிரியை காட்டவும்
இந்நேரம் வாருமேன்.

2 கர்த்தாவே! இறங்கும்!
நல் மீட்பர் நாமமும்
மா சுடர்போல் ப்ரகாசிக்க,
பேரன்பைக் காட்டவும்.

3 கர்த்தாவே! இறங்கும்!
இவ்வருள் வேதத்தை
கேட்போரின் நெஞ்சில் பொழியும்
தேவா நுக்கிரகத்தை.

4 கர்த்தாவே! இறங்கும்!
பேர் நன்மை செய்யுமே.
விண்மாரி பெய்ய, மேன்மையும்
உண்டாகும் உமக்கே.

---

149 S. & S. 524.

"Guide me, O! Thou great Jehovah."

1 பாதை காட்டும் மா யேகோவே!
பரதேசியான நான்
பலவீனன், அறிவீனன்,

இவ்வுலோகம் காடுதான்.
வானுகாரம்
தந்து என்னை போஷியும்.

2 ஜீவத் தண்ணீர் ஊறும் ஊற்றை
நீர் திறந்து தாருமேன்;
தீபமேக ஸ்தம்பம் காட்டும்
வழியில் நடத்துமேன்;
வல்ல மீட்பர்!
என்னைத் தாங்கும் யேசுவே!

3 சாவின் சக்தி ஓங்கி வந்து
நான் அழிந்து போகிலும்
சாவின்மேலும் வெற்றிதந்து,
என்னைச் சேர்க்கும் காலத்தில்
கீத வாழ்த்தல்
உமக்கென்றும் பாடுவேன்.

---

150 S. & S. 488.

"Pass me not."

1 யேசு சுவாமி! அருள் நாதா!
கெஞ்சிக் கேட்கிறேன்.
பாவியேனைக் கைவிடாமல்,
சேர்த்துக்கொள்ளுமேன்.
யேசு சுவாமி!
கெஞ்சிக் கேட்கிறேன்.
பாவியேனைக் கைவிடாமல்,
சேர்த்துக்கொள்ளுமேன்.

2. கெஞ்சினோர் அநேகர் பேரில்
தயை காட்டினீர்
எந்த நீசன் அண்டினாலும்
தள்ளவே மாட்டீர்.

3 தீய குணம் க்ரியை யாவும்
முற்றும் வெறுத்தேன்.
நீரே தஞ்சமென்று நம்பி
வந்து நிற்கிறேன்.

4 தூய ரத்தத்தாலே என்னை
சுத்தமாக்குவீர்.
வல்ல ஆவியால் எந்நாளும்,
காத்து ஆளுவீர்.

---

151 S. & S. 485.

"Even me."

1 அருள்மாரி எங்குமாக
பெய்ய,—அடியேனையும்,
கர்த்தரே!—நீர் நேசமாக
சந்தித்தாசீர்வதியும்.
என்னையும்,—என்னையும்
சந்தித்தாசீர்வதியும்.

2 என் பிதாவே! பாவியேனை
கைவிடாமல்,—இரங்கும்!
திக்கில்லா இவ்வேழையேனை
நோக்கிப் பார்த்துச் சேர்த்திடும்.
என்னையும்,—என்னையும்
நோக்கிப் பார்த்துச் சேர்த்திடும்.

3 யேசுவே! நீர் கைவிடாமல்,
எந்தன் பாவம் நீக்கிடும்.
ரத்தத்தாலே, மாசில்லாமல்,
சுத்தமாக்கி யருளும்.
என்னையும்,—என்னையும்
சுத்தமாக்கி யருளும்.

4 தூய ஆவி! கைவிடாமல்,
என்னில் கிரியைசெய்திடும்.
பாதை காட்டிக் கேடில்லாமல்
என்றும் காத்து ரட்சியும்.
என்னையும்,—என்னையும்
என்றும் காத்து ரட்சியும்.

---

152 S. & S. 582.

"More holiness give me."

1 மென்மேலும் நீர் தாரும்
நல் நம்பிக்கையும்
மெய்யாம் விசுவாசம்
அன்போ டுண்மையும்.
மென் மேலுமே ஊக்கம்
உற்சாகத்தையும்
உண்டாக்கும்; மெய்பக்தி
வைராக்கியமும்.

2 மென்மேலும் நீர் தாரும்
மெய்ஞ் ஞானத்தையும்,
உம்பேரிலே சாரும்
சற்குணத்தையும்.
மென்மேலும் உண்டாக்கும்
நற்சிந்தையையும்,
ஆருளை நாடும்
பேராசையையும்.

3 மென்மேலும் நீர் தாரும்
சுத்தாங்கத்தையும்;
மாசற்ற உள்ளான
நற்சுபாவத்தையும்,
தீப்பாவத்தை வெல்லும்
வல்லாவியையும்.
தேவாவியால் வெற்றிக்
கெம்பீரத்தையும்.

---

153 S. & S. 230.

"Oh! Heavenly ligl t shine on us."

1 பரத்தின் ஜோதியே,
என்மேல் இறங்கிடும்.
ப்ரகாசத்துடனே
உள்ளத்தில் விளங்கும்;
நீர் ஜீவ ஜோதி, தேவரீர்
நற் கதிர் வீசக்கடவீர்.

2 நிறைந்த அருளால்
லௌகீக ஆசையை
அகற்றி, ஆவியால்
பேரின்ப வாஞ்சையை
வளர்த்து நித்தம் பலமாய்
வேரூன்றச் செய்யும் தயவாய்.

3 நீர் என்னை ஆளுகில்,
நான் வாழ்ந்து பூரிப்பேன்;
நீர் என்னை மறக்கில்,

நான் தாழ்ந்து மாளுவேன் ;
என் ஊக்கம் ஜீவனும் நீரே.
கடாட்சம் செய்யும், கர்த்தரே.

4 தேவன்பும் தயவும்
உம்மாலேயே உண்டாம் ;
நற்குணம் யாவுக்கும்
நீர் ஜீவ ஊற்றேயாம் ,
நான் வாழும்படி என்றைக்கும்
என்னை நிரப்பி அருளும்.

---

154 S. & S. 600.

"Search me, O! God."

1 ஆராய்ந்து பாரும் என்னை நீர்
என்னருமை நாதா.
உம் கண்களை மறைக்க யார்
துணிவார் என் பரா.

2 ஆராய்ந்து பார் என் செய்கைகள்
என் நினைவுகளும்.
செம்மை யல்லாத போங்குகள்
எனக்கு காண்பியும்.

3 அந்தரங்க பாவங்களை
நான் கண்டுணர்ந்து,
வெறுக்கும் மனசாட்சியை
தாரும் இப்பொழுது.

4 உம் வசனத்தின் அனலால்
எரிந்து என் மனம்
ஆவியின் நிரப்புதலால்
காரும் என் ஜீவியம்.

Experience—Consecration.

பிரதிஷ்டை.

155 S. & S. 616.

" Take my life, and let if be."

1 என்தன் ஜீவன் யேசுவே!
சொந்தமாக ஆளுமே
என்தன் காலம் நேரமும்
நீர் கையாடியருளும்.

2 என்தன் கை பேரன்பினால்
ஏவப்பட்டு, என்தன்கால்
பணி செய்ய விரையும்;
அழகாக விளங்கும்.

3 என்தன் நாவு இன்பமாய்
உம்மைப்பாட, என்தன் வாய்
ரட்சிப்பைப் பிரஸ்தாபிக்கும்
தூது சொல்ல நடத்தும்

4 என்தன் ஆஸ்தி தேவரீர்
முற்றும் அங்கிகரிப்பீர்,
புத்தி, கல்வி யாவையும்
சித்தப்படி செய்யவும்.

5 என்தன் சித்தம் விடுவேன்,
ஒப்புவித்து கொடுத்தேன்.
என்தன் நெஞ்சை ஆளுவீர்.
அதில் தோன்றி வசிப்பீர்.

6 என்தன் நேசம், பாருமேன்!
திருக்காலில் ஊற்றினேன்.
என்னையே சமூலமாய்
தத்தம் செய்தேன் என்றுமாய்.

———

156 G. N. S. 198.

"On the Cross of Calvary."

1 கல்வாரி சிலுவையில்
தொங்கி சீவனை விட்டீர்;
மானிடரிருதயத்தில்
நன்மாறுதல் செய்ய நீர்
மாசற்ற ஜீவ நதி
பாவம் போக்கத் திறந்தீர்;
எனக்காக மரித்தீர்;
கல்வாரி சிலுவையில்
அக்கல்வாரி! அக்கல்வாரி!
எனக்கேசு மரித்தார்!
கல்வாரி சிலுவையில்.

2 இந்த அன்பின் பாசந்தான்
மீட்பருக்கு எந்தனை
முழுதத்தம செய்யத்தான்;
ஆவி ஆத்மா, தேகத்தை
சர்வாங்க பலியாக
தேவனே படைக்கிறேன்,
எனக்காக மரித்தீர்,
கல்வாரி சிலுவையில்.

3 நான் உமக்குச் சொந்தமாய்
என்னை ஏற்றுக்கொள்ளுமேன்;
யேசு மீட்பர் தயவாய்
என்னில் வாசம் பண்ணுமேன்,
பாவத்தை வெல்ல நெஞ்சை
ஸ்திரமாக்கியிடுமேன்;
எனக்காக மரித்தீர்,
கல்வாரி சிலுவையில்.

---

157 S. A. 249.

"Glory, Glory, Hullelujah!"

1 தேவா! என்னைப் படைக்கிறேன்
இதோ என் யாவும் தாறேன்
நான் உம் உயர்ந்த நேசத்தால்
தயங்குவதால்,
என் நேசம் பாசம் யாவையும்
இதோ அங்கீகரியும்.
உம்மால் காக்கப்பட்டென்றும் நான்
நிலைத்திருப்பேன்
ஜெயம்! ஜெயம்! அல்லேலூயா
எனதெல்லாம் படைத்தேன்.
பூரண ரட்சிப்பெனக்கே.
மீட்பர் ரத்தத்தால்.

2 என் மனம் சித்தம் ஈகிறேன்
சந்தோஷமாய் நான் தாறேன்
பூரணமாய்ச் சுத்தம் செய்யும்
தீமையை நீக்கும்;
தாறேன் என் முழு ஜீவனை
கேளும் என விண்ணப்பத்தை
உம் சொந்தம் ஆனதால் இப்போ
நான் படைக்கிறேன்.

3 கர்த்தா! நான் உன் ஏவுதலால்
பூசையாய்ப் படைக்கிறேன்
இரத்தத்தால் வாங்கப்பட்டதால்
நம்பி ஜீவிப்பேன்:
நேச சர்வ வல்லவரே
எனக்கும்மைக் காட்டுமே
நானும்மையே பார்க்குமட்டும்
பாதை காட்டுமேன்.

158 S. & S. 659.

"Anything for Jesus"

1 நேச யேசுக்காக யாவையும் செய்வேன்,
என்ன நேரிட்டாலும் பின்வாங்கமாட்டேன்;
நற்போர் வீரனைப்போல் நிலைத்து நின்று,
நேசர் கற்பனைகள் செய்வேன் நான் என்றும்.

2 யாவையும் வெறுத்தேன் என் ஏசுவுக்காய்,
ஆவலாய்ச் சிலுவை எங்குமவர்க்காய்,
சுமந்து பின்செல்ல, எந்தன் ஜீவநாள்
பூசை இதோ ராஜா! எப்போதும் நீ ஆள்.

3 எந்தக் காரியமும் உண்மையாய்ச் செய்வேன்,
என்ன நேரிட்டாலும் மெய்யாய்ச் சகிப்பேன்;
பாவ அடிமைகள் ரட்சிப்படைய,
தளரா வைராக்கியம் என்னில் படையும்.

---

159 S. A. 101.

"Often Thy voice."

1 மெய்டாய் எனை தத்தம் செய்ய,
பலவேளை நாதா! நீர் என்னைக் கேட்டீர்;
அசட்டையாய் உம்மைத் தகித்தேன்;
என்றாலும் திரும்ப நீர் பேசுகிறீர்.
மீட்பா! என் யாவையும் தாரேன்
இனிப் பாவத்தால் உம்மை நான்
நோகமாட்டேன்;
மீட்பா! என் யாவையும் தாறேன்
இரங்கும் உம்மை விடமாட்டேன்

2 வேண்டா வெறுப்பாய் உம்மை நான்
சேவித்த வஞ்சனையை யுணர்ந்து,
தாங்கா பாவச் சுமை நீங்க
மெய்யாய் ஜெபித்து இதோ பணிந்து.

3 இலேசான பாதை நான் தேடி.
தர்க்கித்து, காலம் கழிக்கமாட்டேன் :
நீர் காட்டும் பாதையில் செல்ல,
என்னை இதோ முழு தத்தம்செய்கிறேன்.

4 மீட்பா! உம் ஆவியை ஊற்றும்,
நீர் சென்ற பாதையில் நானும் செல்ல,
சுய நேசம் முற்றும் நீர் கொன்று,
வல்லமை தாரும் பசாசை வெல்ல

---

160 G. H. 72.

"Precious Jesus, Oh ! to love Thee."

1 மீட்பா உம்மில் அன்புகூர்வேன்
நீர் என் சொந்தமாதலால்
எந்தன் உள்ளம் முற்றும் தாறேன்
நானும் சொந்தமாதலால்.
நேச மீட்பா! நேசமீட்பா!
இயேசுவே நீரே எல்லாம்.

2 சித்தம் காயம் எந்தனுள்ளம்
ஆவியால் நிறைந்திட
கிருபையாய் ஏற்றுக்கொள்ளும்
என்றும் உம் சொந்தமாக.

3 வஸ்திரத்தின் ஓரம் தொட்டேன்
பயமின்றி என் கையால்
இரத்த ஊற்றினாலே பெற்றேன்
அருள் நேசர் பலத்தால்.

4 நேச மீட்பா! உந்தன் அன்பு
நாவால் சொல்ல வொண்ணாதே
"முற்றும் சுத்தமாகும்" என்று
சொன்ன உடன் ஆயிற்றே.

161 S. A. 242.

"I bring my heart to Jesus."

1 என்னுள்ளத்தை மீட்பர்க்கு
படைத்தேன்,
என் சிந்தை அனைத்தும்
ஒப்பித்தேன்,
அவரால் என் ஆத்மா
ஆறிற்று,
அவரின் நேசத்தால்
தேறிற்று
மீட்பர்க்கும் எனக்கும்
ஐக்யத்வம்,
ஆம் நித்யம்.

2 மீட்பர்க்கென் கவலையை
சொன்னேனே.
அவர் பாதம் ஜீவன்
வைத்தேனே,
லோக செல்வங்கள்,
வாடிப்போம்
அவரின்றி ஜீவன்
பாழாய்ப்போம்
யேசென் ஜீவனிலும்
உத்தமம்
சத்தியம்.

3 பாவத்தோடு மீட்பர் முன்
ஜெபித்தேன்,
ரத்தத்தால் நான் சுத்தம்
தரித்தேன்,
அவர் தயவை நான்
தேடினேன்,
கண்ணீரோடு வாக்கை
நாடினேன்.

அறிவேன் என் யேசு
ஜீவிக்கிறார்
மன்னிக்கிறார்.

4 எனதெல்லாம் யேசண்டை
வைத்திட்டேன்,
ஆத்ம சுத்தம் வேண்டிக்
கேட்டிட்டேன்,
ஒன்றையும் மறைத்து
வைத்திடேன்,
துன்பமாம் சிலுவை
தள்ளிடேன்,
தீவந்தென் சிறையை
நீக்குது
மீட்குது,

---

162 G. B. 300.

"I have found a friend."

1 ஓர் நல்ல நண்பரைக் கண்டேன்.
அநாதி நேசராக
பேரன்பினாலே இழுத்தார்
தம்மண்டை தயவாக.
அவ்வன்பினால் என் உள்ளத்தை
தம் வசமாக்கினாரே.
நான் அவர் சொந்தம், என்தனை
என்றென்றும் ஆட்கொண்டாரே.

2 ஓர் நல்ல நண்பரைக் கண்டேன்,
மரித்து என்னை மீட்டார்.
என் ஜீவன் காக்க தம்மையே
பூராவாய்த் தந்துவிட்டார்.
என் சொந்தமல்ல ஒன்றுமே,

ஈந்தோர்க்கே சொந்தமாக
என் ஜீவன் சுகம் யாவுமே
படைப்பேன் என்றுமாக.

3 ஓர் நல்ல நண்பரைக் கண்டேன்.
மா பாசமுள்ள அன்பர்.
பலத்த வழித் துணைவர்
மெய்ஞ்ஞானமுள்ள நண்பர்.
இந்நேசர் அன்பை விட்டிநோ!
நீக்காது என்னை ஒன்றும்;
சாவோ? பாடோ? பாதாளமோ?
நான் அவர் சொந்தம் என்றும்.

---

163 S. & S. 498.

"Jesus! I come to Thee."

1 சிறையின் கஷ்டம் கசப்பிலும்
நின்று வந்தேன்! நீங்கி வந்தேன்!
முழுச் சுவாதீனம் அடையவும்
யேசுவே! வந்தனன்!
பிணியினின்றும் சுகத்துக்காய்,
வறுமை நீங்கச் செல்வத்துக்காய்,
பாவத்தை விட்டு ஆத்திரமாய்
யேசுவே! வந்தனன்.

2 இழிவு நஷ்டம் தவறிலும்
நின்று வந்தேன்! நீங்கி வந்தேன்!
ரட்சிப்பின் லாபம் அடையவும்
யேசுவே! வந்தனன்.
துன்பத்தை விட்டு இன்பத்துக்காய்,
துயரத்தை விட்டுச் சாந்தத்துக்காய்,
இகழ்ச்சி நின்று மகிழ்ச்சிக்காய்,
யேசுவே! வந்தனன்.

3 மருளுகின்ற ஸ்திதியிலும்
நின்று வந்தேன் ! நீங்கிவந்தேன் !
தேவன் தம் சித்தம் அறியவும் !
யேசுவே ! வந்தனன்.
ஆபத்தினின்று சம்பத்தையும்,
தாழ்வினைவிட்டு வாழ்வினையும்,
கண்டடைவேன் இந்நேரத்திலும்,
யேசுவே !வந்தனன்.

4 மரணக்கெடி பயததிலும்
நின்றுவந்தேன் ! நீங்கிவந்தேன்!
நேசரின் வீட்டில் மகிழவும்
யேசுவே ! வந்தனன்!
நாசத்தைவிட்டு ஜீவனுக்காய்,
மோசத்தினின்று பாக்கியத்துக்காய்,
திருச்சமுகத் தின்பத்துக்காய்
யேசுவே ! வந்தனன் !

---

164 S. & S. 60.

"I give my heart to Thee."

1 என் நெஞ்சை, ஸ்வாமி, உமக்கே
ஈவாய்ப் படைக்கிறேன்;
நீர் இந்தக் காணிக்கையையே
கேட்டீரென்றறிவேன்,

2 என் மகனே, உன் நெஞ்சைத் தா,
நீ இக்கடனைத் தீர்,
வேறெங்கும் நீ சுகப்பட
மாட்டாயே, என்கிறீர்

3 தேவா, நீர் அதைத் தயவாய்
அங்கீகரிக்கவும்
நான் அதை, உள்ள வண்ணமாய்
தாறேன் அன்பாயிரும்.

4 என் முழு நெஞ்சையும்அன்பாய்,
ஸ்வாமி, நீர் என்றைக்கும்
அசமும் ஆலயமுமாய்
படைத்துக் கொண்டிரும்.
நீர் அதை ஆளும் கர்த்தரே
அத்தால் நான் பாக்கியன்;
நான் உலகத்தான் அல்லவே
நான் உம்முடையவன்.

---

165 H. M. 68.

"Pledged to Jesus."

1 என் ஜீவியம் மீட்பர்க் களித்தேன்
என் பெலன் உம்முடைமை
பொன்னும் பொருள் நான் மதியேன்
என்றும் உமதென் ஜீவியம்
கையளித்தேன் ஆம் கையளித்தேன்.
எந்நாளும் உண்மையுடன்
என் எஜமான் ஊழியத்தில்,
நன் முகங் காணுமட்டும்
கையளித்தேன் ஆம் கையளித்தேன்.
எந்நாளும் உண்மையுடன்
என் எஜமான் ஊழியத்தில்,
நன் முகங் காணுமட்டும்.

2 என் வேலை மீட்பர்க் களித்தேன்
சிந்தை கரம். உழைப்பேன்
இளையா வைராக்யத்தோடு
இணை சேனை சேர்மட்டும்.

3 என் நஷ்டம் நோயைச் சகிப்பேன்
அவர் அன்பின் நிமித்தம்.
சிலுவை தினம் சுமப்பேன்
அவர் வாக்கை நம்பியும்.

Experience—Love.

சிநேகம்.

166 S. & S. 242.

"Love Divine."

1 அன்பின் ரூபி, திவ்யானந்தம்
பாரில் ஈய வந்தீரே;
எங்கள் ஏழை நெஞ்சில் வாசம்
பண்ணி மருள் தீர்ப்பீரே.
யேசுவே, நீர் பரிதாபம்
அன்புமாய் இருக்கிறீர்;
பார துக்கங் கொண்ட உள்ளம்
வந்து தேற்றல் செய்குவீர்.

2 உமது நல்ல ஆவி தாரும்,
எங்கள் நெஞ்சு பூரிப்பாய்
உம்மில் சார நீரே வாரும்,
சுத்த நேச வடிவாய்;
பாவ ஆசை எல்லாம் நீக்கி
அடியாரை ரட்சியும்,
விசுவாசத்தைத் துவக்கி
முடிப்பவராய் இரும்.

3 சர்வ வல்லவரே, வாரும்,
நாங்கள் உமதாலயம்;
எங்களுக்குத் தயை தாரும்,
என்றும் விலகாதேயும்;
என்றும் உம்மை ஸ்தோத்திரித்து,
வானோர் போல சேவிப்போம்;
குறைவற்ற அன்பைப் பெற்று
ஒழியாமல் துதிப்போம்.

4 நாங்கள் நித்திய வீட்டில் சேர்ந்து
கறை திரை இன்றியே
உம்தன் சாயல் பெற்று வாழ்ந்து

தேவ அன்பில் மூழ்கியே
எங்கள் கிரீடம் உம்தன் பாதம்
வைத்துப் போற்றும் வரைக்கும்,
நாதா, அடியாரை நித்தம்,
மறுரூபமாக்கிடும்.

---

167 S. & S. 65.

"One there is above all."

1 யாரிலும் மேலான அன்பன்,
மா நேசரே!
தாயைப்பார்க்க நல்ல நண்பன்,
மா நேசரே!
மற்ற நேசர் விட்டுப் போவார்,
நேசித்தாலும் கோபங்கொள்வார்,
யேசுவோ என்றென்றும் விடார்,
மா நேசரே!

2 என்னைத் தேடிச் சுந்தஞ்செய்தார்
மா நேசரே!
பற்றிக்கொண்ட என்னை விடார்
மா நேசரே!
இன்றும் என்றும் அவர் காப்பார்,
பற்றினோரை மீட்டுக்கொள்வார்
துன்ப நாளில் தேற்றல் செய்வார்
மா நேசரே!

3 நெஞ்சே இதை தியானம்பண்ணு,
மா நேசரே!
அன்பையே விடாமல் பேணு,
மா நேசரே!
எந்தத் துன்பம் வந்தும் நில்லு,
நேரே ஜீவ பாதை செல்லு,
யேசுவாலே யாவும் வெல்லு,
மா நேசரே!

4 என்றென்றைக்கும் கீர்த்தி சொல்வோம்
மா நேசரே!
சோர்வுற்றாலும் வீரங்கொள்வோம்,
மா நேசரே!
கொண்டநோக்கம் சித்திசெய்வார்,
நம்மை அவர் சேர்த்துக்கொள்வார்,
நாடும் நன்மை யாவும் ஈவார்,
மா நேசரே!

---

168 S. & S. 659.

"My Jesus! I love Thee."

1 என் யேசுவே! உம்மையே நான் நேசிக்கிறேன்.
வேறெந்த வீண் வாழ்வையும் நாடாதிருப்பேன்.
உம்மாலே பேர் நன்மையை நான் கண்டடைந்தேன்.
என் நாதா! மென்மேலும் உம்மை நேசிக்கிறேன்.

2 இப்பாவியின் பேரில் முந்தி நேசம் வைத்தீர்.
நீர் ப்ராணத்தியாகம் செய்து மீட்டுக் கொண்டீர்.
முட்க்ரீடம் ஐங்காயமும் தியானிக்கிறேன்.
என் நாதா! மென்மேலும் உம்மை நேசிக்கிறேன்.

3 பேரன்பின் சொரூபி! உம்மைப் போற்றுகிறேன்.
எப்போதும் உம்மோடு தங்க வாஞ்சிக்கிறேன்.
என்ஜீவன் போனாலும்கூட நீங்க மாட்டேன்.
என் நாதா! மென்மேலும் உம்மை நேசிக்கிறேன்.

4 பேரின்பமாம் ராஜ்யத்தில் ஆனந்தம் கொள்வேன்.
நீடூழி உம் முகம் கண்டு ஸ்தோத்திரிப்பேன்.
எப்பாவமில்லாமலும் நான் வாழ்த்தல்செய்வேன்.
என் நாதா! மென்மேலும் உம்மை நேசிக்கிறேன்.

---

169 S. A. 115.

"I have heard of a Saviour's love.

1 இரட்சகரொருவரன்பு
பேரன்பென்று கேள்விப்பட்டேன்;
ஆனால் மெய்தானோ ஜீவன் விட்டு,

என்னை மீட்க குருசில் மாண்டார்?
ஆம்! ஆம்! ஆம்!
என்னை நேசித்ததாலேதானே?
ஆம்! ஆம! ஆம்!
என்மேல் கிருபை கூருகிறார்.

2 அவர் பாடும் இரத்தம் சிந்தலும்
அதிகமாய் கேள்விப்பட்டேன்!
ஆனால் மெய்தானா இவை எல்லாம்
பாவி எனக்காகத்தான்?

3 இந்த யேசுவினடியார்க்கு
ஓர் ராஜ்யமிருக்கிறதாம்.
ஆனாலேழைப்பாவி எனக்கு
அங்கோர் பங்கு இருக்கிறதா?

4 நாதா இந்த என் விண்ணப்பத்தை
அன்பாக அங்கீகரித்து,
உமதாவியா லிவையெல்லாம்
என்பங்கென்று காட்டிடுமேன்.

---

170 S. & S. 1045.

"God gave His Son for me."

1 தேவன் சுதன் தந்தார்,
ஓ! மா அன்பு;
பாவபன்னிப்பீந்தார்
ஓ! மா அன்பு;
மா, பாவியானாலும்,
நிர்ப்பந்தனானாலும்,
என்னைக் கைதூக்கினார்,
ஓ! மா அன்பு.

2 என் கடனைத் தீர்த்தார்,
ஓ! மா அன்பு;
கட்டுகள் தகர்த்தார்,
ஓ! மா அன்பு;

நீதி நிறைவேற்றினார்,
என்னை ஈடேற்றினார்
இயேசு ராஜன் ஆனார்
ஓ! மா அன்பு.

3 நம்புறேன் இதயத்தில்,
ஓ! மா அன்பு;
பேர் உண்டு சொர்க்கத்தில்,
ஓ! மா அன்பு;
என் பயம் நீங்கிற்று,
என் பாவம் போயிற்று
சந்தோஷம் ஆயிற்று,
ஓ! மா அன்பு.

---

171 S. & S. 574.

"Oh! it comes over my soul."

1 ஓயாமல் திரண்டுருளும்
கடல் அலை போலவே,
ரட்சகர் ஆவியின் வெள்ளம்
புரளுதென் நெஞ்சிலே.
அலைபோல புரளுது பார்!
அற்புத தேவாவி வெள்ளம்
என் பாவமெல்லாம் பறந்து
வெளிச்சம் உதிக்குதிதோ!

2 மீட்பாண்டை நான் சேராமல்
தடுத்த கரை யாவும்,
இவ்வலை வீசி மோதலால்
நீங்கிற்று, மீட்பர் வந்ததால்.

3 ஓர்காலத்தில் சஞ்சலத்தால்
நிறைந்த என்னிதயம்
இப்போ தேவன்பின் வெள்ளத்தால்
இன்பமாய் நிற்குதென்றும்.

---

172 G. B. 308.

"I have found a precious Saviour.."

1 நேச மீட்பர், பாவம் நீக்கி,
என்னைச் சுத்தமாக்கினார்.
அவர் திவ்ய அன்பில் மூழ்கி,
நித்தம் வாழச் செய்கிறார்.
நேச நாதா! அல்லேலூயா!
உம்மில் அன்புகூருவேன்
நேச நாதா! நீரே முந்தி
அன்புகூர்ந்தீர்; தாங்குமேன்.

2 லோகம் எங்கும் இல்லா வாழ்வை
கண்டு, பாக்யம் அடைந்தேன்.
சாகா ஜீவன் தந்த அன்பை
எங்கும் யார்க்கும் சொல்லுவேன்.

3 யேசுநாதர் அன்பை விட்டு,
வெகுதூரம் அலைந்தேன்.
மீட்பர் அன்பாய்த் தேடிவந்து
வாவென்றழைத்தார் ; வந்தேன்.

4 அவர் தேகம், கை, விலாவில்
பாய்ந்த செந்நீர் காண்பித்தார்.
உன்தன் பாவம் போக்கக் குருசில்
ஜீவன் விட்டேன், பார்! என்றார்.

5 நேசர் அன்பின் சத்தம் கேட்டு
பாசம் பொங்கிப் பணிந்தேன்,
அவர் பாதம் தாழ வீழ்ந்து
ஜீவன் யாவும் படைத்தேன்.

6 மீட்பர் மந்தை சேர்ந்தோனாக
அவர் சொந்தமாயினேன்.
மோசமின்றி சுகமாக,
காப்பார் என்று அறிவேன்.

---

173 S. & S. 119.

"What a wonderful Saviour."

1 என் பாவம் நீக்கி விட்டனர்,
ஒப்பில்லா வல்ல மீட்பர்.
மாக்ரயம் தந்து மீட்டனர்,
ஒப்பில்லா வல்ல மீட்பர்.
ஒப்பில்லா வல்ல மீட்பர்!
மாநேசர்! என் நேசர்!
ஒப்பில்லா வல்ல மீட்பர்!
என் யேசுவைப் பார்.

2 மாசற்ற ரத்தம் சிந்தினார்
ஒப்பில்லா வல்ல மீட்பர்.
தம்மண்டை சேர்த்து அணைத்தார்
ஒப்பில்லா வல்ல மீட்பர்.

3 என் நெஞ்சைச் சுத்தமாக்கினார்
ஒப்பில்லா வல்ல மீட்பர்.
அங்கரசாட்சி செய்கிறார்
ஒப்பில்லா வல்ல மீட்பர்.

4 என் துணையாக நிற்கிறார்
ஒப்பில்லா வல்ல மீட்பர்
எத்தீங்குமின்றிக் காக்கிறார்
ஒப்பில்லா வல்ல மீட்பர்.

5 சுத்தாங்க சுபாவம் நல்கினார்
ஒப்பில்லா வல்ல மீட்பர்.
பிசாசை வெல்லச் செய்கிறார்.
ஒப்பில்லா வல்ல மீட்பர்.

6 உலோக நேசம் நீக்கினார்
ஒப்பில்லா வல்ல மீட்பர்.
என் நெஞ்சை வசமாக்கினார்
ஒப்பில்லா வல்ல மீட்பர்.

Experience—Faith.

விசுவாசம்.

174 S. & S. 235.

"My faith looks up to Thee."

1 அருள் நிறைந்தவர்,
பூரண ரட்சகர்
தேவரீரே,
ஜெபத்தைக் கேட்கவும்
பாவத்தை நீக்கவும்
ஜீவனில் சேர்க்கவும்
வல்லவரே.

2 சோரும் என் நெஞ்சுக்கு
பேரருள் பொழிந்து
பெலன் கொடும்.
ஆ! எனக்காகவே
மரித்தீர், யேசுவே
என் அன்பின் ஜ்வாலையே
ஒங்கச் செய்யும்.

3 பூமியில் துக்கமும்
சஞ்சலம் கஸ்தியும்
வருகினும்,
இரவில் ஒளியும்
சலிப்பில் களிப்பும்
துன்பத்தில் இன்பமும்
அளித்திடும்.

---

175 S. & S. 581.

"Nearer my God to Thee."

1 உம்மண்டை, தேவனே,
நான் சேரட்டும் ;
சிலுவை சுமந்து
நடப்பினும்,
என் ஆவல் என்றுமே
உம்மண்டை, தேவனே,
நான் சேர்வதே.

2 தாசன் யாக்கோபைப்போல்
ராக்காலத்தில்
திக்கற்றுக் கல்லின்மேல்
நான் துயில்கையில்
எந்தன் கனவிலே
உம்மண்டை, தேவனே,
இருப்பேனே.

3 நீர் என்னை நடத்தும்
பாதை எல்லாம்
விண் எட்டும் எணிபோல்
விளங்குமாம் ;
தூதர் அழைப்பாரே
உம்மண்டை, தேவனே,
நான் சேரவே.

4 விழித்து உம்மையே
நான் துதிப்பேன் ;
என் துயர் கல்லை உம்
வீடாக்குவேன் ;
என் துன்பத்தாலுமே
உம்மண்டை, தேவனே,
நான் சேர்வேனே.

176 S. & S. 1162.

"As helpless as a Child."

1 தந்தை தன் சிறு மைந்தனை
கையேந்தித் தாங்குவான் ;
சீராட்டப் பெற்ற பாலகன்
அபாயம் நினையான்.

2 அவ்வாறே என்னை, பிதாவே
காப்பாற்றித் தாங்குவீர் ;
என் பெலவீனம் நீங்கவும்
கையேந்தி வருவீர்.

3 மாதாவின் நேச மடியில்
சாய்ந்தாடும் குழந்தை
தாயாரின் முகம் பார்க்கையில்
மறக்கும் க்லேசத்தை.

4 அவ்வாறே, நேச ரக்ஷகா,
உம்மருள் முகத்தை
நான் பார்க்க, ஸ்திரமாக்குவீர்
என் விசுவாசத்தை.

5 தாய்தந்தைப் பக்கம் பாலரை
உட்கார வைக்குங்கால்
சந்தோஷித்துள்ளங் களிப்பார்
பெற்றோரின் அன்பினால்.

6 அவ்வாறே திருப் பாதத்தில்
ஆனந்தம் அடைந்தேன் ;
மென்மேலும், அருள் நாதரே,
பேரன்பை ருசிப்பேன்.

---

177 H. A. & M. 265.

"Thy way not mine."

1 மயங்குந் தாசனை,
தேவா, நீர் நடத்தும் ;
என் பாதை காட்டியாய்
சகாயம் புரியும்.

2 நீர் காட்டும் பாதைதான்
எப்போதும் நல்லதே ;
சுற்று, நேர் ஆயினும்
நல் வீடு சேர்க்குமே.

3 கபோதி நான், ஐயா,
முன் நிற்பதறியேன் ;
நீர் என்னை நடத்தும்,
நான் பின்னே செல்லுவேன்.

4 உம் சித்தம்போல நீர்
என் பாத்ரம் எடுத்தும்
சந்தோஷம் , சஞ்சலம்,
எதாலும் நிரப்பும்.

5 வியாதி, சுகமோ ?
இஷ்டர், பகைஞரோ ?
வறுமை, செல்வமோ ?
சிறிதோ, பெரிதோ ?

6 என் பங்கேதாயினும்,
என் இஷ்டம் எதிலும்
வேண்டாம், என் தேவனே ,
நீர் ஆண்டு நடத்தும்.

178 S. & S. 24.

"Lord's Protection."

1 சேதம் அற யாவும் வர,
கர்த்தர் தாம் நடத்துவார்;
காற்றடித்தும் கொந்தளித்தும்,
யேசுவை நீ பற்றப்பார்.

2 "யேசு பாரார், அவர் காரார்,
அவர் கேளார்," என்றாதே;
கலங்காதே, தவிக்காதே,
நம்பினோனை விடாரே.

3 கண் மூடாத, உறங்காத
உன் கர்த்தாவைப் பற்றி நீ
அவர் தாமே காப்போராமே
என்று அவரைப் பணி.

4 உன் விசாரம் மா விஸ்தாரம்
ஆகிலும், கர்த்தாவுக்கு
நீ கீழ்ப்பட்டு க்லேசமற்று
அவருக்குக் காத்திரு.

5 தேவ கைக்கும் வல்லமைக்கும்
சகலமும் கூடாதோ?
எந்தச் சிக்கும் எந்தப் பிக்கும்
அவரால் அறும் அல்லோ?

6 சீரில்லாத உன் ஆகாத
மனசுன்னை ஆள்வது
நல்லதல்ல; அதற்கல்ல,
கர்த்தருக்குக் கீழ்ப்படு.

7 நேச யேசு, தேவரீர்க்கு
சித்தமான யாவையும்
நீர் குறித்து, நீர் கற்பித்து,
நீர் நடத்தி அருளும்.

179 S. & S. 221.

"Christ on the Sea."

1 கடல் கொந்தளித்துப் பொங்க,
கப்பல் ஆடிச் செல்கையில்
புசல் காற்று சீறி வீச,
பாய் கிழிந்துபோகையில்,
யேசு, எங்களிடம் வந்து
கப்பலோட்டியாய் இரும்;
காற்றமைத்துத் துணை நின்று
கரை சேரச் செய்திடும்.

2 கப்பல் ஏறிப்போவோருக்கு
கடும் மோசம் வரினும்,
பாறை, மின், முழக்கம், காற்று
உமக்கெல்லாம் அடங்கும்;
இருளில் நீர் பரஞ்ஜோதி,
வெய்யிலில் நீர் நிழலே,
யாத்திரையில் திசை காட்டி,
எங்கள் ஜீவன் உம்மிலே.

3 எங்கள் உள்ளம் உம்மை நோக்கும்
இன்ப துன்ப காலத்தில்,
எங்கள் ஆவி உம்மில் தங்கும்
இகபர ஸ்தலத்தில்;
யேசு, எங்களிடம் வந்து
கப்பலோட்டியாய் இரும்;
காற்றடக்கித் துணை நின்று
கரையேறச் செய்திடும்.

---

180 S. & S. 553.

"Trusting in God."

1 அஞ்சாதிரு, என் நெஞ்சமே,
உன் கர்த்தர் துன்ப நாளிலே
கண்பார்ப்போம் என்கிறார்;

இக்கட்டில் திகையாதிரு,
தகுந்த துணை உனக்கு
தப்பாமல் செய்குவார்.

2 தாவீதும் யோபும் யோசேப்பும்
அநேக நீதிமான்களும்
உன்னிலும் வெகுவாய்
கஸ்தி அடைந்தும், பக்தியில்
வேரூன்றி ஏற்ற வேளையில்
வாழ்ந்தார்கள் பூர்த்தியாய்.

3 கருத்தாய்த் தேவ தயவை
எப்போதும் நம்பும் பிள்ளையை
சகாயர் மறக்கார்;
மெய்ப் பக்தி உன்னில் வேர் கொண்டால்,
இரக்கமான கரத்தால்
அணைத்துப் பாலிப்பார்.

4 என் நெஞ்சமே, மகிழ்ந்திரு;
பேய், லோகம், துன்பம் உனக்கு
பொல்லாப்புச் செய்யாதே;
இம்மானுவேல் உன் கன்மலை,
அவர்மேல் வைத்த நம்பிக்கை
அபத்தம் ஆகாதே.

---

181 A. H. 173.

"All things are possible."

1 இயேசுவை நம்புவோருக்கு
செய்ய வொண்ணு தொன்றில்லையாம்;

பயமின்றி உந்தன் வாக்கு
கர்த்தா ஏற்றுக்கொண்டோமே நாம் ;
விசுவாசித்தேன் என் நாதனே
செய்யவொண்ணு தொன்றில்லையே.

2 மகா வருத்தமானதாம்
நான் பாவமற்றிருப்பது ;
நம்பிக்கையாலிதாகுமாம்
யேசுவின் சத்திய வாக்கிது ;
விசுவாசித்தேன் என் நாதனே
பெறவொண்ணு தொன்றில்லையே.

3 விஸ்வாசம் நீர் பூரிப்பதால்
உம் சாயலைப் போலாகுவேன் ;
செய்கை, எண்ணம், வசனத்தால்
இடறலின்றி ஜீவிப்பேன் ;
துஷ்டரோ பேயோ சேறட்டும்
எனக்கேலா தொன்றில்லையாம்.

4 சர்வ வல்லவர் ராஜனே
மானிடர் பலன் கிறிஸ்துதான் ;
நானும் புதிதானுடனே
கிறிஸ்துவால் பிரகாசிப்பேன் ;
பாவம் வெல்லும் ஆன்மத்திற்காம்
வெல்லவொண்ணு தொன்றில்லையாம்.

---

182 S. A. 115.

"I have a Saviour who is mighty."

1 தொல்லை கஷ்டங்கள் சூழ்ந்திடும்,
துன்பம் துக்கம் வரும்,

இன்பத்தில் துன்பம் நேரிடும்,
இருளாய்த் தோன்றும் எங்கும் ;
சோதனை வரும் வேளையில்,
சொல் கேட்கும் செவியிலே,
" பட்டயத்தால் ஜெயம்வரும் "
பரன் உன்னைக் காக்க வல்லோர்.
காக்கும் வல்ல மீட்பர் உண்டெனக்கு,
உண்டெனக்கு, உண்டெனக்கு,
காக்கும் வல்ல மீட்பர் உண்டெனக்கு,
காத்திடுவார் என்றுமே.

2 ஜய மிகுந்ததோர் காலத்தில்
ஆவி குறைவால்தான் ;
மீட்பர் உதிர பலத்தால்,
சத்துருவை வென்றேன் ;
என் பயம் யாவும் நீங்கிற்று,
யேசு கை தூக்கினார் ;
முற்றாய் என்னுள்ளம் மாறிற்று,
இயேசென்னைக் காக்க வல்லோர்.

3 என்ன வந்தாலும் நம்புவேன்,
என்நேச மீட்பரை;
யார் கைவிட்டாலும் பின்செல்வேன்,
எனது இயேசுவை;
அகலம், ஆழம் உயரமாய்,
எவ்வளவன்பு கூர்ந்தார்
என்ன துன்பங்கள் வந்தாலும்
என்னைக் கைவிடமாட்டார்.

---

183 T. S. S. 38

" One day in my heart,"

1 என் இதயத்தில் ஒரு நாள்
இம்மண்ணின் கவலைகளால்

கலங்கையில் என் இயேசுவை
நினைத்தால் தாவிலை.
ஆ! இந்தத் துக்கம் வேணுமோ?
எனக்கு இயேசுதான் அல்லோ?
இம்மண்ணின் துக்கக் கவலை
பொல்லாங்கள் சோதனை.

2 அப்போது என்னை சுவாமியார்
மா தயவாய்க் கண்ணோக்கிறூர்,
பயப்படாதிரு, நாம் தாம்
உனக்குத் துணையாம்
என்றுற்றுவார் நான் உடனே
ஓர் கீர்த்தனத்தைப் பாடச்சே
கிலேசம் யாவும் போய்விடும்,
என் நெஞ்சு பூரிக்கும்.

3 இவ்வண்ணமாக இயேசுவின்
வெளிச்சத்தை நான் துக்கத்தின்
இராவில் கண்டு நெஞ்சிலே
அமர்ந்திருப்பேனே.
ஆகையினுல் எந்நேரமும்
மகிழ்ச்சியாகிப் பாடவும்,
உன் நேசமுள்ள இயேசுவை
என் உள்ளமே, நினை.

---

184 T. S. S. 28.

"I am Jesus' lamb."

1 கிறிஸ்தின் ஆட்டுக்குட்டி நான்,
இது என் மகிழ்ச்சிதான்,
என் நல் மேய்ப்பரான கர்த்தர்
நன்றுய்ப் போஷிக்கச் சமர்த்தர்
என்னை அவர் நேசிப்பார்,
பேர் அறிந்தழைக்கிறூர்.

2 அவரை நான் அண்டினேன்.
அவர் கோலால் பூரிப்பேன்,
எனக்கவர் ருசியான
மேய்ச்சலும் குளிர்ச்சியான
தண்ணீர் ஊற்றும் காட்டுவார்,
பசிதாகம் தீர்க்கிறார்.

3 அவர் என்னை இம்மையின்
அருள் நாட்களுக்குப் பின்
ஜீவ மேய்ச்சலுக்கழைத்து
மடியிலே சேர்த்தணைத்து,
பேணுவார் மகிழேனோ?
நான் மா பாக்கியன் அல்லேனா?

---

185 S. & S. 836.

" Trusting Jesus."

1 சுககாலம் என்கிலும்,
துக்கமான போதிலும்,
நெறிநின்று தவறேன்,
நித்தம், நித்தம், நம்புவேன்.
வாழ்விலும் மா தாழ்விலும்,
கஷ்ட நஷ்டம் ஆகிலும்,
யேசுவைப் பின்பற்றுவேன்.
நித்தம், நித்தம், நம்புவேன்.

2 எந்தன் வெறும் நெஞ்சத்தில்
தூய ஆவி விளங்கில்,
அவராலே வெல்லுவேன்,
நித்தம், நித்தம், நம்புவேன்.

3 இன்பம் ஆகில் பாடவும்,
துன்பத்தில் மன்றாடவும்;

மோசம் நேரில் அஞ்சிடேன்,
நித்தம், நித்தம், நம்புவேன்.

4 ஜீவகாலம் முழுதும்,
சாவுபரியந்தமும்,
நித்திய சீவன் நாடுவேன்
நித்தம், நித்தம், நம்புவேன்.

---

186 S. & S. 113.

"Blessed the fountain."

1 சீரில்லாத பாபிஷ்டரே!
ஜீவ ஊற்றின் ஜலத்தினால்
பாவதோஷம் தீர்த்திடுமே
ஏகபலியின் ரத்தத்தினால்.
நெறிதப்பிப் போவதினால்
நிர்மூட நீசனானேன்.
மாசில்லாத ரத்தத்தினால்
வெளேரென்று தூய்தாகுவேன்.
வெண்மையாகுவேன்,
வெண்மையாகுவேன்,
மாசில்லாத ரத்தத்தினால்
வெளேரென்று தூய்தாகுவேன்

2 வானராட்சிய நாயகரே
தாழ்மை நீசக்கோலமானார்.
ஒப்பில்லாத மா நேசரே
முட்கிரீடம் சூட்டப்பட்டார்!
ரட்சை செய்தனராதலால்
நன்றி நினைத்தேயிருப்பேன்.
மாசில்லாத ரத்தத்தினால்
வெளேரென்று தூய்தாகுவேன்.

3 குணசிந்தை தீயதெல்லாம்.
பக்தி சுத்த குணியமே,
தீவினை ரத்தாம்பரமாம்;
சுத்தி செய்வார் ஈண்டில்லையே.
அருள்வாக்கின் ஆறுதலால்
யேசுவண்டை சேர்ந்திடுவேன்.
மாசில்லாத ரத்தத்தினால்
வெளேரென்று தூய்தாகுவேன்.

---

187 S. & S. 569.

"Whiter than snow."

1 என் அருமை ரட்சகா! கண்ணோக்குமேன்!
சம்பூரண ரட்சிப்பை நாடுகிறேன்.
என் பாவங்கள் யாவையும் வெறுக்கிறேன்.
நீர் கழுவும்! முழுதும் வெண்மையாவேன்.
வெண்மையாவேன்!
நான் வெண்மையாவேன்!
நீர் கழுவும்! முழுதும் வெண்மையாவேன்.

2 என் அருமை ரட்சகா! இரங்குவீர் !
எப்பாவமும் நீங்கச் சுத்தாங்கம் செய்வீர்.
உம் ரத்தமே கதி என்றண்டிக் கொண்டேன்.
நீர் கழுவும்! முழுதும் வெண்மையாவேன,

3 என் அருமை ரட்சகா! முற்றிலுமாய்
வீண் கிரியைகள் ஒழித்து,—நம்பிக்கையாய்
நற்பாதத்தில் என்தனைப் படைக்கிறேன்.
நீர் கழுவும்! முழுதும் வெண்மையாவேன்.

4 என் அருமை ரட்சகா! தள்ளமாட்டீர்.
துர்க்குணத்தை மாற்றியே புதுப்பிப்பீர்.
எப்போதும் காப்பாற்றுவீர்! நம்புகிறேன்!
நீர் கழுவும்! முழுதும் வெண்மையாவேன்.

188

"I am coming to the Cross."

1 சிலுவையிற் சேருவேன்,
ஏழை ஈன குருடன்;
லோகம் குப்பை என்கிறேன்
பூர்ண மீட்சி பெற்றவன்
கர்த்தா ! உம்மை நம்புவேன்,
கல்வாரி பலியே நீர் !
சிலுவை யண்டை தாழ்வேன்
இப்போ யேசே ! ரட்சிப்பீர்.

2 நெடும் வாஞ்சை உமக்காய்
ஆயின் ஆண்டது தீமை.
யேசு சொல்வார் இன்பமாய்
" தீர்ப்பேன் முற்றாய்ப் பாவத்தை."

3. வாக்குதத்தம் நம்புவேன்,
உணர்வேன் திரு ரத்தம்;
மண்ணில் தாழ்ந்து விழுவேன்,
அறையுண்டேன் கிறிஸ்தோடும்.

4 சேர்வார், ஆத்மா நிறையும்,
அவரே என் பூரிப்பு;
அடைந்தேன் சொஸ்தம் முற்றும்;
ஆட்டுக் குட்டிக்கு மாண்பு.

---

189 S. & S. 570.

"Every Day, Every Hour."

1 மீட்பரே, என் ஜீவனே,
உம்மால் கிட்டக் கிட்டச் சேர்த்திடும்;
திவ்ய ரத்தஞ் சிந்தினீர்;
அன்பால் என்னை என்னைத் தேற்றிடும்.

நாளும், எப்போதும்
சுத்தஞ் செய்யும் சக்தியால்
என்னைச் சுத்திகரியும்,
சேர்த்துக்கொள்ளும், கொள்ளும் நேசத்தால்.

2 மாயமான லோகத்தில்
என்னை மெல்ல மெல்ல நடத்தும்;
உம்மை நம்பிப் போகையில்
என்னை என்றும் என்றும் காத்திடும்.

3 மேலும் மேலும் நேசிப்பேன்
ஜீவனுள்ள எல்லா நாள்மட்டும்;
மேலும் ஜோதி ஆசிப்பேன்
ஜீவ லோகம், லோகம் சேர்மட்டும்.

---

160 S. & S. 235.

"My faith looks up to Thee."

1 கல்வாரி மறியே!
நாடினேன் நான் உம்மை
என் ரட்சகா;
கேளும் என் விண்ணப்பம்,
நீக்கும் என் பாதகம்,
ஆம் நான் இந்நாள் முதல்
உம் அடிமை.

2 தொய்யுதே என் மனம்,
உம் க்ருபையால் தேற்றும்
உயிரற்றேன்;
எனக்காய் மரித்தீர்,
உமக்கே தேவரீர்,
மாருத சுத்தாங்க
ஜீவபலி.

3 என் பாதை தோன்ருது,
துன்பம் மூடும்போது
வழிகாட்டும்;
என் இருள் நீக்கிடும்,
கண்ணீர் துடைத்திடும்,
அலைந்து கெடாமல்
தற்காத்திடும்.

---

191 S. & S. 556.

"Jesus Saviour pilot me."

1 யேசு நாதா! காக்கிறீர்.
இளைப்பாறச் செய்கிறீர்.
மோசம் நேரிடாமலும்,
பாதம் இடருமலும்,
என்னைத் தாங்கி நிற்கிறீர்,
நேசநாதா! காக்கிறீர்.

2 வாரி போன்ற லோகத்தில்
யாத்ரை செய்து போகையில்,
சூறைக் காற்று மோதினும்,
ஆழி கோஷ்டமாயினும்,
அமைதல் உண்டாக்குவீர்,
நேசநாதா! காக்கிறீர்.

3 சற்று தூரம் செல்லவே,
தேவராஜ்யம் தோன்றுமே!
துன்பம் நீங்கி,—வாழுவேன்,
இன்பம் பெற்று,—போற்றுவேன்,
அதுகாறும் தாங்குவீர்,
நேசநாதா! காக்கிறீர்!

Experience—Submission.

கீழ்ப்படிதல்.

192 H. A. & M. 79.

"Be awake."

1 தேவ ஆட்டுக்குட்டியே,
லோகத்தாரின் மீட்பரே,
உம்மால் மீட்கப்பட்ட நான்
தேவரீர்க்குச் சொந்தந்தான்;
நீர் என் கோட்டை, தஞ்சமாம்,
யார் என் வாழ்வை நீக்கலாம்?

2 உம்மைப் பற்றும் நேசத்தை,
உம்மில் வைக்கும் பக்தியை
பேயும், கெட்ட லோகமும்
மூர்க்கமாய் விரோதிக்கும்;
இன்பம், துன்பம் நித்தமே
கண்ணியாக நிற்குமே.

3 கர்த்தரே, என் உள்ளத்தில்
ஒளி வீசி, மனதில்
அந்தகாரம் நீக்கிடும்;
அன்பின் ஜுவாலை எற்றிடும்;
தூய ஆவி ஈவையும்
பூர்த்தியாக அளியும்.

4 எந்த நாழிகையிலே
நீர் வந்தாலும், இயேசுவே,
உம்மை நானும் சந்தித்து,
கண்ணால் கண்டு, களித்து
வாழ்வதற்கு, தினமும்
சாவதானம் ஈந்திடும்.

---

193 H. A. & M. 265.

"Not my will, but Thine, be done."

1 என் பாதை வேண்டாமே
உம் பாதை காட்டிடும்;
தேவா, உம் கரத்தால்
நீர் என்னை நடத்தும்.

2 நீர் காட்டும் பாதையே
எவ்வாறும் உத்தமம்;
நேர், சுற்று ஆயினும்
நடத்தும் விண் ஸ்தலம்.

3 என் சித்தம் ஆபத்தாம்,
உம் சித்தம் நாடுவேன்;
நான் செல்லும் பாதையை
நீர் காட்டக் கெஞ்சுவேன்.

4 நான் தேடும் ராஜியம்
உம் சொந்தமானதே;
அங்கென்னைச் சேர்த்திடும்
பாதையும் உம்மதே.

5 உம் சித்தப்படியே,
என் பாத்திரம் எடுத்தும்
சந்தோஷஞ் சஞ்சலம்
எதாலும் நிரப்பும்.

6 வறுமை செல்வமும்,
சுகம் துக்கமும் நீர்
என் பங்கு ஆகவே
தெரிந்து கொள்ளுவீர்.

7 என் இஷ்டம் எதிலும்
வேண்டாம், என் தேவனே,
என் வழிகாட்டியாம்
நீர் சர்வ ஞானமே.

194 G. B 552.

"If come to Jesus."

1 யேசுவண்டை சேரில்
பூரிப்பாக்குவார்,
நெஞ்சின் மிக நோவும்
ஆறப்பண்ணுவார்.
யேசுவண்டை சேரில்
பூரிப்பாக்குவார்.
"வாரும், சிறியோரே,
வாரும்" என்கிறார்.

2 யேசுவண்டை சேரில்
ஏற்றுக் கொள்ளுவார்,
எந்தன் பாவம் நீக்கி,
மீட்டு ரட்சித்தார்.

3 யேசுவண்டை சேரில்
கையில் ஏந்துவார்,
பாதுகாத்து, பின்பு
ஜீவன் கொடுப்பார்.

---

195 S. & S. 696.

"Only an armour bearer."

1 ஆயுததாரி நான், அபாத்திரனே,
சேனாதிபதிக்கோ பின்செல்வேனே,
நில் செல் என்றவர் சொல்ல, கேட்கவும்,
யேசுவின் நல்வாக்கை நம்பி வெல்லவும்.
பேரொலி கேட்குதே! ஜெயமுண்டாம்!
போராடுவோம் முனைமுகமெல்லாம்.
சேனாதிபதி என்னை நோக்குவார்;
ஆயுததாரியையும் நம்புவார்.

2 ஆயுததாரி நான், இந்நேரத்தினில்
சன்னத்தனைப் படைமுகத்தில்,
போர்க்களத்தாரவாரங் கேட்கவே
பயமுமில்லாமல் யுத்தஞ்செய்வேனே.

3 ஆயுததாரி நான், அசக்தனுமாய்
காணப்பட்டாலும், வெற்றிவேந்தனாய்
நித்தியகாலம் மிகவாழுவேன்;
வானலோகந்தன்னில் சுகித்திருப்பேன்.

---

196 S. & S. 607.

"Draw me nearer."

1 திவ்ய நண்பனே! உம்மைப் பற்றுவேன்,
உமதன்பைக் கேட்டேனே;
விசுவாசத்தால் திரு காயத்தை
சேர இப்போ வாறேனே.
என்னைச்சேர் ஐயா, உம்மண்டையே சேர்.
பாவ நாசஞ் செய்திரே;
என்னைச்சேரும், சேரும், சேரும் இப்போது
காயப்பட்ட யேசுவே!

2 பிரதிஷ்டையாய் உமதாவியால்
என்னை யேவும் கர்த்தாவே;
எனதுள்ளமும் உமதிஷ்டம்போல்
இசைந்துண்டாக்கவே.

3 உம்மை நோக்குங்கால், செபஞ்செய்வதில்
என் மனது மகிழும்;
ஒரு அன்பன்போல் உம்மையே காண
குறையற்ற இன்பமும்.

4 உம்மைப் பார்க்கும் நாள் அன்பின் பூரணம்
எனதாத்மா பூரிக்கும்;
உம்மோடே சேர்ந்து, சீயோனில் நின்று
ஆனந்தம் தான் இருக்கும்.

Experience—Joy.

சந்தோஷம்.

197 S. & S. 207.

"Be glad in the Lord."

1 ஏகோபித்துச் சேருங்களேன்
கர்த்தாவில் ஆனந்திக்கவும்,
விசாரம் விட்டோயுங்களேன்
கெம்பீரித் தாராதிக்கவும்.
செய்வோம்! செய்வோம்!
சத்தியேகனைத் துதிசெய்வோம்!

2 பராபரன் மெய் வஸ்துவாம்
தயாபரர் ஆண்டவரே
வந்தார் வையகத்திலே. ஆம்!
இரட்சிக்க வல்லவரே.

3 பிசாசின் உபாயங்களால்
பயங்கர மோசமுண்டாம்.
ஆனாலும் தேவாவியினால்
ஒத்தாசையும் ஜெயமுமாம்.

4 தரித்திரமே யாயினும்
சந்தோஷம் விடாதிருப்போம்,
மா கல்வி இல்லாவிடினும்
ஓயாமல் ஸ்தோத்தரிப்போம்.

5 ஏகோபித்துப் பாடுங்களேன்
மகோற்சவானந்தத்தினால்,
சத்யேகரைப் போற்றுங்களேன்
கெம்பீர சங்கீதத்தினால்.

198 S. & S. 883.

"At the Cross."

1 நான் உம்மைப்பற்றி,—ரட்சகா!
வீண் வெட்கம் அடையேன்.
பேரன்பைக் குறித்தாண்டவா!
நான் சாட்சி கூறுவேன்.
சிலுவையண்டையில்
நம்பி வந்து நிற்கையில்,
பாவ பாரம் நீங்கி, வாழ்வடைந்தேன்,
எந்த நேரமும் எனதுள்ளத்திலும்
பேரானந்தம் பொங்கிப் பாடுவேன்.

2 ஆ! உம்தன் நல்ல நாமத்தை
நான் நம்பிச் சார்வதால்,
நீர் கைவிடீர்! இவ்வேழையை
காப்பீர் தேவாவியால்.

3 மாவல்ல வாக்கின் உண்மையை
கண்டுணரச் செய்தீர்,
நான் ஒப்புவித்த பொருளை
விடாமல் காக்கிறீர்.

4 நீர் மாட்சியோடு வருவீர்,
அப்போது களிப்பேன்,
ஓர் வாசஸ்தலம் கொடுப்பீர்,
மெய் பாக்யம் அடைவேன்.

---

199 S. & S. 650.

"Ring the bells of Heaven."

1 வானலோக தூதர் ஸ்துதி செய்கிருர்,
நீச பாவி குணப்பட்டதால்,
தேவனும் மகா சந்தோஷமாகிருர்,
மகன் மீண்டு வந்து சேர்ந்ததால்.

போற்றும்! போற்றும் ஏகக்கூட்டமாய்,
போற்றும்! போற்றும் பேரானந்தமாய்,
கெட்டுப்போன பாவி மீண்டுவந்திட்டான்,
குணமாறி ரட்சிப்படைந்தான்.

2 வானலோக தூதர் ஏகக்கூட்டமாய்
யேசுவைக் கொண்டாடி நிற்கிறார்,
ரட்சா பெருமானைப் பேரானந்தமாய்
கூடிப் பாடிப் போற்றி செய்கிறார்.

3 வான லோக தூதரோடு ஏகமாய்
ஸ்தோத்ர கீதம் பாடிப் போற்றுவோம்,
யேசுநாமம் ஜெயம் என்று இன்பமாய்
ஆரவாரத்தோடே வாழ்த்துவோம்.

---

200 S. & S. 38.

"I am so glad."

1 வான பிதா தந்த வேதத்திலே
நான் மகிழ்வேன், அன்பு சொல்லுகிறார்;
விவித ஆச்சர்யம் யாவினுள்ளே
ஆச்சர்யம் யேசென்னை நேசிக்கிறார்.
ஆனந்தம்! யேசு நேசிக்கிறார்,
நேசிக்கிறார், நேசிக்கிறார்.
ஆனந்தம்! யேசு நேசிக்கிறார்,
நேசிக்கிறார் என்னையும்.

2 நான் மறந்தோடினும் நேசித்தென்னை
சென்ற இடம் வந்து தேடுகிறார்
மீண்டும் நினைந்தவர் நேசந்தன்னை
ஆண்டவர் அண்டுவேன், நேசிக்கிறார்.

3 மா ராஜர் வானுயர் தோற்றத்திலே
கீதம் இதே என்றும் பாடிக் கொள்வேன் ;
என் துதி நித்திய காலத்திலே,
ஆச்சரியம் ! யேசென்னை நேசிக்கிறார் !

4 நேசிக்கிறார், நானும் நேசிக்கிறேன்,
மீட்க வந்தாத்துமம் நேசிக்கிறார்;
சாவுமரத்தில் அந்நேசங் கண்டேன்,
நிச்சயம், யேசென்னை நேசிக்கிறார்.

---

201 S. & S. 866.

"O Happy Day."

1 என் கர்த்தரை நான் கண்ட நாள்
ஆ எத்தனை சிறந்ததே,
என் மீட்பரைச் சந்தித்த நாள்
எனக் கானந்த மாயிற்றே
நல் நாளே! நல் நாளே!
யேசு என் பாவம் தீர்த்தாரே ;
சந்தோஷமே ! ஆனந்தமே !
ரட்சகரிடம் சேர்ந்தேனே.

2 என் ஆவி பூரிப்பாகுது,
ஆனந்த பாஷ்பம் தூவுறேன் ;
யேசு என் மீட்பர் ஆம் இது
எங்குமே பிரஸ்தாபிப்பேன்.

3 என் நோக்கம் நிறைவேறிற்றே!
நான் யேசுவை, யேசென்னையும்
இம்மைக்கும் சொந்தமாகவே
ஆக்கிக்கொண்டோம் மறுமைக்கும்.

4 அலைந்த எந்தன் உள்ளமே!
யேசுவில் தேற்றம் அடைந்தனாய்;
என்றும் உன் கெதி விடாதே;
அவரில் ஜீவன் பெறுவாய்.

5 நான் செய்த வாக்குத்தத்தத்தை
நாள் தோறும் புதிதாக்குவேன்;
மரண நேரத்தில் அதை
மா திருப்தியாய்க் கொண்டாடுவேன்.

202

S. & S. 757.

"Bringing in the Sheaves."

1 காலை, பகல், மாலை, எந்தநேரமேனும்
அன்பின் விதைகளை விதைத்திடுவோம்;
அறுப்புக்குக் காத்து, தக்க வேளை பார்த்து,
அரிகள் சுமந்து, பாடிவருவோம்.
பாடிவருவோம், பாடிவருவோம்,
அரிகள் சுமந்து, பாடிவருவோம்;
பாடிவருவோம், பாடிவருவோம்;
அரிகள் சுமந்து, பூாடிவருவோம்.

2 கோடை, பனி, மாரி, எந்த காலமேனும்
கானல், குளிர், ஒன்றுக்கும் ஒதுங்கிடோம்;
அறுப்பு முடிந்து, வேலை நிறகும்போது,
அரிகள் சுமந்து, பாடிவருவோம்.

3 கஷ்டம், நஷ்டம், துன்பம், என்ன நேரிட்டாலும்,
கண்ணீருடன் கர்த்தருக்கு விதைப்போம்;
கர்த்தர் நம்மை நோக்கி, துக்கம் நீக்குவதால்,
அரிகள் சுமந்து, பாடிவருவோம்.

---

203 S. & S. 644.

"In the Shadow of His Wings."

1 உம்தன் செட்டை நிழலில்
இளைப்பாறலாம்!
எந்தப்பாடும், துன்பும் தீங்கும்
சற்றும் அணுகாமல், நீங்கும்
உம்தன் செட்டை நிழலில்
இளைப்பாறலாம்.
உம்தன் செட்டை நிழலில்
இளைப்பாறலாம்.
தங்குவேன், தங்குவேன், தங்குவேன்,
உம்தன் செட்டை நிழலில்.
சுகிப்பேன், சுகிப்பேன், சுகிப்பேன்,
உம்தன் செட்டை நிழலில்.

2 உம்தன் செட்டை நிழலில்
சமாதானமாம்!
நெஞ்சின் நோவு முற்றும் ஆறும்,
துன்பம் இன்பமாக மாறும்.
உம்தன் செட்டை நிழலில்
சமாதானமாம்.
உம்தன் செட்டை நிழலில்
சமாதானமாம்!

3 உம்தன் செட்டை நிழலில்
பேரானந்தமாம்!
போற்றுவேன் சந்தோஷமாக
பாடுவேன் கெம்பீரமாக!
உம்தன் செட்டை நிழலில்
பேரானந்தமாம்.
உம்தன் செட்டை நிழலில்
பேரானந்தமாம்.

Experience—Peace.

சமாதானம்.

204 S. & S. 319.

" What a friend we have."

1 பாவ சஞ்சலத்தை நீக்க
பிராண சிநேகிதனுண்டே,
பாவச் சுமை தீர்த்துப்போட
யேசுவின் நற்பாதமே,
சோருவோமே, திகைப்போமே
சால துக்க துன்பத்தால்,
புத்தியீனம்! மாறிப்போகும்
ஜெபதபம் செய்வதால்.

2 கஷ்டநஷ்ட முண்டானாலும்
யேசுவண்டை சேருவோம்,
மோசநாசம் நேரிட்டாலும்,
ஜெபதூபம் காட்டுவோம்,
நோக்குவார் உன் நெஞ்சின் நோவை,
பெலவீனம் தாங்குவார்.
நீக்குவார் உன் மனச்சோர்வை,
தீயகுண மாற்றுவார்.

3 பெலவீனமானபோதும்
கிருபாசனமுண்டே.
இனஜனம் சாரும்போதும்
புகலிடம் இதுவே.
ஒப்பில்லாத பிராணநேசா!
உம்மை நம்பி நேசிப்போம்.
அளவற்ற அருள் நாதா!
உம்மை நோக்கிக் கெஞ்சுவோம்.

Experience—Trust.

நம்பிக்கை.

205

H. A. & M. 186.

"Cast your care upon Him."

1 உன் நெஞ்சிலே உண்டான
விசாரம் யாவும் நீ
கர்த்தாவின் உண்மையான
கரத்துக்கொப்புவி;
விண் மண்ணை ஆண்டுவரும்
மகா தயாபரர்,
உன் காரியங்களுக்கும்
வழி உண்டாக்குவர்.

2 ஜெயம் அடைந்து வாழ,
கர்த்தாவைப் பிள்ளைபோல்
நீ நம்பி மனதார
பணிந்து பற்றிக்கொள்,
உன் கவலைகளாலும்
என் பயங்கொள்ளுவாய்?
எத்துன்பங்கள் வந்தாலும்,
மன்றாடி ஜெபிப்பாய்.

3 கர்த்தாவே, எங்களுக்கு
எல்லா இக்கட்டிலும்
ரட்சிப்பளிப்பதற்கு
சமீபமாயிரும்.
நற்பாதையில் நடத்தும்,
என்னுயிர் நாளனைத்தும்
ராஜ்யத்தில் கடத்தும்;
அப்போது வாழுவோம்.

206 H. A. & M. 266.

"Lead kindly light."

1 சூழும் இருளில், அருள் ஜோதியே,
நடத்துமே;
ராவும் இருள், என் வீடுந் தூரமே,
நடத்துமே;
நீர் தாங்கின், தூரக் காட்சி ஆசியேன்;
ஓர் அடி மட்டுங் காணக் கேட்கிறேன்.

2 என் இஷ்டப்படி நடந்தேன், ஐயோ!
முன்னாளிலும்
ஒத்தாசை தேடவில்லை; இப்போதோ
நீர் நடத்தும்;
உல்லாசம் நாடி, திகில் நேரினும்,
வீம்பு கொண்டேன்; அதை எண்ணாதேயும்.

3 இம்மட்டுந் தாங்கி வந்த நீர் இன்னும்
ரா போமட்டும்,
கன்மலை, சேறு, காடு, ஆற்றிலும்
நடத்திடும்;
உதயநேரம் வரக் களிப்பேன்;
மறைந்துபோன நேசரைக் காண்பேன்.

---

207 H. A. & M. 125.

"Be glad in the Lord."

1 ஆ, களிகூர்ந்து பூரித்து
மகிழ், என் உள்ளமே;
தயாபரர்தாம் உனது
அனந்த செல்வமே.

2 நெஞ்சே இராவும் பகலும்
சாரம் என்? இனி
வலை அனைத்தையும்
காவுக்கொப்புவி.